


CONTACT ADDRESSES FOR THE DISTRIBUTION OF FREE COPIES OF THIS LITERATURE

**Messengers for Mary**

373/H1/H2-73, R.M.Nagar, Dindigul - 624 001
Tamil Nadu, South India.
Telefax : 91 (0451) 2440297 , 2440298 , 2461807
leadmfm@dataone.in & leadmfm@gmail.com
raja_santha@yahoomail.co.in & litelicc@sify.com
Cell Phone : 94433 - 25807

Lead India Communication Centre
17B/1&2, Pandian Nagar,
Dindigul - 624 001
Tamil Nadu, South India.

Lead India Business Centre
16A,P1&P2, Jubilee Building
Beschi College,Karur Road
Dindigul - 624 001
Tamil Nadu, South India.


# விண்ணகத் தந்தையின் அன்பு மொழிகள்







**I DECLARE THAT SUPERNATURAL AND DIVINE INTERVENTION SEEMS TO ME THE ONLY LOGICAL AND SATISFACTORY EXPLANATION OF THE FACTS**

BISHOP'S CONCLUSIONS IN 1945, DURING HER LIFETIME, OF ENQUIRY INTO (1935-1945) MOTHER EUGENIA

## அன்னை யூஜீனியா எலிசெபெத்தா ரவாசியோ

தந்தையாகிய கடவுள் என் அன்பு மகன், எனது சிறிய செடி என்று அழைத்த அன்னை யூஜீனியா யார்? நமது கருத்தில் அவர்கள், இக்காலத்தின் தலைசிறந்த ஒளி விளக்குகளில் ஒன்றாவார். மேலும் புதிய திருச்சபையின் சிறிய இறைவாக்கினர் அவர். இத்திருச்சபைக்கு விண்ணகத்தந்தை மையமாக அமைகிறார், மனித இனத்துக்கு அவர் கொடு முடியாகத் திகழ்கிறார். இத்திருச்சபையில் தான் ஒற்றுமை ஆன்மீகத்தின் உயர்ந்த கொள்கையாகத் திகழ்கிறது. இருளும் , கலக்கமும் நிறைந்த இக்காலத்துக்கு விண்ணகத் தந்தை அன்னை யூஜினியாவை ஓர் ஒளி விளக்காகத் தந்திருக் கிறார்.

இத்தாலியிலுள்ள பெர்கமோ மாநிலத்தில் சன் செர்வாசியோ தே அட்டா என்ற சிறிய நகரில் 1907ஆம் ஆண்டு செப்டம்பர் 4ஆம் நாள் அன்னை பிறந்தார்கள். அவர்களது குடும்பம் ஒரு பாமரக் குடும்பம்.

எனவே, ஆரம்பக் கல்வியே அவர்க ளுக்கு கிடைத்தது. சிறிது காலம் ஒரு தொழிலகத்தில் பணிபுரிந்தபின், தமது இருபதாவது வயதில் அப்போஸ்தலர்களின் தேவ மாதா சபையில் சேர்ந்தார். இங்கு தான் அன்னை அவர்களின் தனி வரங்கள் பெற்ற ஆளுமை வளரத் தொடங்கியது. தமது 25வது வயதில் சபைக்குத் தலைவியாகும் உயர் பதவி அவர்களுக்குக் கிடைத்தது.

ஆன்மீக அருங்குணங்களால் சிறந்த அன்னை அவர்கள் சமூகப் பணியிலும் சிறந்து விளங்கி வரலாற்றிலே இடம் பெற்று விட்டார்கள். தமது 12 ஆண்டு பதவி காலத்தில் 70 நிறுவனங்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அவற்றில் மருந்தகங்கள் , பள்ளிகள் மற்றும் கோயில்கள் இடம் பெறுகின்றன. அவைகள் ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பா கண்டங்களில் இன்னும் செயல்பட்டு வரு கின்றன.

தொழுநோய்க்கான முதலாவது மருந்தைக் கண்டுபிடித்தவர் அன்னை அவர்களே! வெப்ப நாடுகளில் வளரும் ஒரு மூலிகையிலிருந்து அம்மருந்தைத் தயாரித்திருக்கிறார்கள். அம்மருந்தை பாரிசிலுள்ள லூயி பாஸ்டர் ஆய்வு நிலையம் ஆராய்ந்து மேலும் சீர்படுத்தியது.

Raoul Follerea - வின் மறைப்பணி அன்னை அவர்கள் ஆதரித்து, அவளது அடிகளில் நடந்து அவள் தொழுநோயாளி களுக்காக ஏற்படுத்திய நிறுவனத்தைக் கட்டி எழுப்பினார்கள். அதனால் தொழுநோயாளி களின் திருப்பணியாளர் என்று அன்னை அவர்கள் போற்றப்படுகிறார்கள்.

1939 முதல் 41-வரை இரண்டு ஆண்டுகளில் தொழுநோயாளிகளின் நகரம் என்ற ஒரு நிறுவனத்தை ஐவர் கோஸ்டிலுள்ள ஆசோப்ட் என்ற இடத்தில் அமைத்திருக்கிறார்கள். இதை அன்னை அவர்களே, சிந்தித்து அமைத்து, நிறுவி வெற்றியும் கண்டிருக்கிறார்கள். இந்நிறுவனம் 200000 சதுர மைல் பரப்பளவில் கட்டப்பட்டு, ஆப்பிரிக்காவில் மற்றும் உலகத்தில் பணிபுரியும் தலைசிறந்த தொழுநோயாளியின் மையங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. அது தொழுநோயா ளருக்குச் செய்யும் சேவை தலைசிறந்து விளங்குகிறது.

இந்த அரும்பெரும் முயற்சியைப் பாராட்டி, பிரெஞ்சு அரசு அன்னை யூஜினியாவின் சபையான அப்போஸ்தலர்களின் தேவ மாதா சபைக்கு பெரும் தேசிய விருது ஒன்றை வழங்கியிருக்கிறது. அச்சபையில் அன்னை 1935 லிருந்து 1947 வரை உயர் தலைமைப் பதவி வகித்துவந்தார்கள். 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10ஆம் நாள் அன்னை யூஜீனியா இறைவனடி சேர்ந்தார்கள்.

அன்னை அவர்கள் நமக்கு விட்டுச் சென்றி ருக்கும் சொத்து. விண்ணகத் தந்தையின் அன்பு மொழிகளாகும். இது ஒன்றே விண்ணகத் தந்தையாகிய கடவுள் தனிப்பட்ட முறையில் ஒருவருக்குக் கொடுத்த வெளியீடுகளாகும். இதை மட்டுமே, திருச்சபை பத்து வருட ஆய்வுக்குப் பிறகு உண்மையானது தகுதியானது என்று அறிவித்துள்ளது.

விண்ணகத் தந்தை தம் அன்பு மொழிகளை இலத்தீன் மொழியே தெரியாத அன்னை யூஜினியாவுக்கு இலத்தீன் மொழியிலேயே 1932ஆம் ஆண்டு எடுத்துச் சொல்லி யிருக்கிறார்.

1981ஆம் ஆண்டு அவ்வுரையாடல்களைப் பற்றி நாம் தெரிந்துகொண்டோம். ஐம்பதாவது ஆண்டு நிறைவான 1982ஆம் ஆண்டில் அவ்வுரை யாடல்கள் இலத்தீன் மொழியிலிருந்து இத்தாலியில் மொழிபெயர்க்கப்பட்டது.

இவ்வுரையாடல்கள் மூலம் பல அருட் கொடையின் ஆன்மீகப் புதுமைகள் நிகழ்ந்திருக் கின்றன. அவைகள் சிறப்பாக சிறைச்சாலை களிலும், போர் முகாம்களிலும், மருத்துவ மனை களிலும், ஆன்மாக்களிடையே நிகழ்ந்திருக் கின்றன. இதை உணர்ந்து இவ்வுரையாடல்கள் ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிய மொழி, ஜெர்மன் மொழி மற்றும் பிற மொழிகளிலும் பெயர்க்கப் பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதோ, தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டு உங்கள் கையில் தவழுகின்றன.

# முன்னுரை

கடவுள் என் தந்தை! இச்சொற்கள் இன்றைய உலகில் எல்லா இடங்களிலும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. கடவுள் நம் தந்தை என்பதை மக்கள் இப்போது உணரத் தொடங்கிவிட்டனர்.

இவ்வேளையில் உலகுக்கு விண்ணகத் தந்தை கொடுத்த அன்பு மொழிகள் அடங்கிய இந்நூலை வெளியிடுவது நமது கடமையாகும். கடவுளின் படைப்புகளில் ஒன்றான, இறைத் தந்தையின் பால் ஆழ்ந்த பக்தி கொண்டிருந்த யூஜீனா எலிசெபெத்தா ரவாசியோ என்ற சகோதரிக்கு இவ்வுரையாடல்கள் விண்ணகத் தந்தையால் வழங்கப்பட்டன. இவற்றை திருச்சபை தகுதி வாய்ந்தவை என ஏற்றுக் கொண்டிருக்கிறது.

பிரான்சு நாட்டிலுள்ள கிரேனாபிள் என்ற மறைமாவட்ட முன்னாள் ஆயரான மேதகு அலெக்சாண்டர் கையிலோ, 1935ஆம் ஆண்டு பல வல்லுநர்களின் உதவியால் இவ்வுரையாடல்களை ஆராய்ந்து தமது கருத்தை வெளியிட்டார். அவ்வல்லுநர்களின் குழுவில் கீழ்க்கண்டோர் இடம் பெற்றனர்.

1. அருட்திரு.கெரே.பிரேளாபின் மறைமாவட்ட முதன்மைக்குரு
2. அருட்திரு அல்ஸாட்
3. அருட்திரு அருஸ்தேவலேன்சின் அமொன்ஸ் சேசு சபைக்குருக்கள்.

இவர்கள் மெய்யியல், இறையியல் வல்லுநர்கள். மேலும் ஒரு உளவியல் வல்லுநரும், ஒரு மருத்துவ ஆய்வாளரும், இக்குழுவில் இடம் பெற்றிருந்தனர். இவர்களின் தீவிரமான ஆய்வுக்குப்பின் இவ்வுரை யாடல்களின் தகுதியும், உண்மையும் வெளியிடப்பட்டன.

இவ்வுரையாடல்கள் மக்களுக்குப் பெரும் உதவியளித்து, விண்ணகத் தந்தை நம் அனைவர்மீது கொண்டுள்ள கனிவுமிக்க அன்பை நமக்கு அறிவுறுத்தும் எனப் பெரிதும் நம்புகிறேன். மேலும், மக்கள் இந்நூலை வரவேற்பர் என்று எதிர்பார்க்கிறேன்.

**அந்திரேயா தே அஸ்கானியோ**

OFM Cap.

**THE FATHER SPEAKS TO HIS CHILDREN**

Imprimatur: PetrusCanisius VanLierde Vic. Generalis
e Vic. Civitatis Vaticanae, Roma,die 13 Martii 1989

# விண்ணகத்தந்தையின் அன்பு மொழிகள்

## முதல் பாகம்

## ஜூலை 1, 1932

### நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திரு இரத்தத்திருவிழா

இறுதியாக இன்று என் காலத்துக்கும் ஒரு புனிதமான நாள்! விண்ணகத் தந்தை வாக்களித்த நாள்!

இன்று நான் இதுவரைச் செய்த தயாரிப்புகள் முடிவு பெற்றன. என்னுடைய மற்றும் மனித இனத்தினுடைய தந்தையின் வரவு மிக நெருங்கி வருவதை நான் உணர்ந்தேன்.

ஒரு சில நிமிடங்கள் செபம் செய்தேன். அதன் பின் எவ்வளவு ஆன்மீக ஆனந்தம்! எத்தனை தெய்வீக மகிழ்ச்சி! என் தந்தையைக் கண்டு அவர் பேசுவதைக் கேட்பதற்காக நான் ஆவலோடு துடித்துக் கொண்டிருந்தேன்.

அன்பால் பற்றியெரிந்த என் இதயம் பெரும் நம்பிக்கையால் மலர்ந்திருந்தது. இதுவரை யார் மீதும் இவ்வாறு நாம் நம்பிக்கை கொண்டதில்லை.

என்னுடைய தந்தையின்பால் நான் கொண்ட சிந்தனை என்னை மகிழ்வால் நிரப்பி மதியிழக்கச் செய்தது.

இறுதியாக இன்னிசை முழங்குவதைக் கேட்டேன். என் தந்தையின் மகிழ்ச்சி மிக்க வரவை வானதூதர் அறிவிக்கத் திரண்டு வந்தனர். அவர்கள் எழுப்பிய இன்னிசைப்பாடல் என்னைப் பெரிதும் கவர்ந்ததால் அதை உடனே குறித்துக் கொள்ள விழைந்தேன். அவ்வின்னிசை முழக்கம் ஓய்ந்தது. உடனே தேர்ந்தெடுக்கப்பட்டவரின் பவனி ஆரம்பமாகியது. அப்பவனியிலே நம்மைப் படைத்தவரும் நம் தந்தையுமான கடவுளுடன் கெருபீம்களும் சேராபீம்களும் இடம் பெற்றிருந்தனர்.

இக்காட்சியைக் கண்டதும் எனது ஒன்றுமில்லாததை நான் உணர்ந்தேன். உடனே தெண்டனிட்டுப் பணிந்து வணங்கினேன். என் இதழ்கள் மரியன்னையின் பாடலைப் பாடிக்கொண்டிருந்தன. அதன்பின் தந்தை அவருக்கு அருகில் என்னை அமரச் சொன்னார். அவர் மாந்தருக்குச் சொல்ல எண்ணியதை என்னை எழுதச் சொன்னார். அப்போது அவரைச் சூழ்ந்து வந்தவனாக மன்றம் முழுவதும் மறைந்துவிட தந்தை மட்டும் என்னோடு தனித்திருந்தார். அவர் அமருவதற்கு முன் என்னோடு பேசத் தொடங்கினார்.

**இதை நான் முன்பே உன்னிடம் சொல்லியிருக்கிறேன். மீண்டும் அதை வலியுறுத்துகிறேன். மனிதர் பால் நான் கொண்டிருக்கும் அன்பை நிரூபிக்க மீண்டும் உலகுக்கு என் அன்பு மகனை அளிக்க முடியாது, மாந்தரை நான் அன்பு செய்யவும் நான் தங்களை அன்பு செய்கிறேன் என்பதை அவர்கள் உணரவும் நானே இப்போது அவர்களிடையே வருகிறேன். அவர்களுடைய உருவைத் தாங்கி அவர்களது எளிமையைத் தரித்துக் கொள்கிறேன். இதோ பார்! என்னுடைய மணிமுடியையும்**



**மகத்துவத்தையும் இப்போது களைந்துவிடுகிறேன். ஒரு சாதாரண மனிதனின் கோலம் பூண்டு கொள்கிறேன்.**

தம்முடைய மணிமுடியையும், மகத்துவத்தையும் களைந்து நம் காலடியில் வைக்கிறார் விண்ணகத் தந்தை. ஒரு சாதாரண மனிதனின் உருவைத் தாங்கிக் கொள்கிறார். பின் பூமி உருண்டையை தமது இடது கரத்தால் ஏந்திக் கொண்டு அதை தம் மார்போடு அணைத்துக் கொள்கிறார். அதன்பின் என்னருகில் அமர்ந்து கொள்கிறார்.

அவரது வருகை, அவர் கொண்ட கோலம் அவர் கொள்ளும் அன்பு இவற்றையெல்லாம் வர்ணிக்க எனக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லையே! அவர் எனக்கு புலப்படுத்தியவற்றை விவரிக்க சொற்கள் இன்றி என் அறியாமையில் உழன்று கொண்டிருந்தேன். இந்நிலையில் தந்தை பேசத் தொடங்கினார்.

**இவ்வீட்டிற்கும் அகில உலகுக்கும் அமைதியும் மீட்பும் உண்டாகுக! மக்களை மீட்கவும், அவர்களை தேடி அன்பு செய்து காப்பாற்றும் தந்தையிடம் அவர்களை இட்டுச் செல்ல, என் ஆற்றலும் அன்பும் எனது தூய ஆவியும் மனித இதயங்களைத் தொட்டு குணமாக்குவார்களாக.**

**இந்நாட்கள் மீட்பின் நாட்கள், ஆசி பொங்கும் நாட்கள் என்பதை பதினோராம் பத்திநாதன் உணர்ந்து கொள்ளட்டும். இவ்வாய்ப்பை இழக்காமல், இகவாழ்வில் தமக்கு உதவி புரிந்து மறுவாழ்வின் எல்லையற்ற மகிழ்வுக்குத் தம்மைத் தயாரிக்க தம்மை நோக்கி வரும் தந்தையிடம் மக்கள் ஈர்க்கப்பெற திருத்தந்தை மாந்தருக்கு அழைப்பு விடுக்கட்டும்.**

**இன்று என் மகன் இயேசுவின் திரு இரத்தத் திருவிழாவாக யிருப்பதால், எனது பணியை மனிதரிடையே நிறைவேற்ற இந்நாளைத் தேர்ந்து கொண்டேன். எனது பணி மனிதரிடையே பெரும் பயன் தருமாறு அதை என் மகனின் திரு இரத்தத்தில் கழுவித் தூய்மைப்படுத்த எண்ணியுள்ளேன்.**

**எனது வருகைக்கான உண்மைக் காரணங்களைக் கூற விரும்பு கிறேன்.**

**1.என் படைப்புகளாகிய மாந்தர் என்னைப்பற்றிக் கொண்டிருக்கும் அதிகமான அச்சத்தை நீக்கும்படி நான் மனிதரிடையே வருகிறேன். மேலும் உலகில் வாழும் என் மக்களாலும் வருங்காலத்தில் வாழப்போகும், மாந்தராலும் நான் அறியப்பட்டு அன்பு செய்யப்படுவதில் நான் பெரு மகிழ்வடைகிறேன் என்பதை உயிர்களுக்கு உணர்த்தவும் நான் வருகிறேன்.**

**2.மனிதருக்கும், மக்களினத்தாருக்கும் நம்பிக்கையை அளிக்க நான் வருகை தந்துள்ளேன். ஓ! எத்தனை மனிதர்கள் அதை விரும்பியும் கூட அதை இழந்துவிட்டார்கள்! இந்நம்பிக்கையையும்கூட இழந்துவிட்டார்கள்! இந்நம்பிக்கை அவர்களை அமைதியிலும் பாதுகாப்பிலும் வாழவைத்து தமது மீட்புக்காக அவர்களை உழைக்க வைக்கும்.**

**3.நான் இருப்பது போலவே என்னை வெளிப்படுத்த நான் வருகை தந்துள்ளேன். அவ்வாறே நான் அறியப்படவும் ஆசிக்கிறேன். அதனால், தந்தையாகிய என்மீது மக்கள் கொள்ளும் அன்போடு அவர்களது**

நம்பிக்கையும், வளர்ச்சியுறும். எனக்கு ஒரே ஒரு அக்கறை உண்டு. அதுவே என் அனைத்து மக்களையும், பாதுகாத்து அவர்களை அன்பு செய்வது.

எந்த ஓவியனும் தான் வரைந்த ஓவியத்தைப் பற்றிய சிந்தனையில் பெரும் மகிழ்வு அடைகிறான். அதுபோலவே, நானும் என் உன்னத படைப்பாகிய மக்களிடையே வந்து தங்கியிருப்பதில் பெரும் மகிழ்வும் இன்பமும் அடைகிறேன்.

காலங்கள் கடந்து செல்லுகின்றன. எனினும் நான் மக்களை அன்பு செய்கிறேன் என்பதை அவர்கள் அதிவிரைவில் உணரவேண்டும். மேலும் ஒரு தந்தை தன் மக்களோடு இருந்து அளவளாவுவது போன்று நானும் மாந்தரிடையே இருந்து அவர்களோடு உரையாடுவதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன் என்பதையும் அவர்கள் உணர வேண்டும்.

நானே நிலைப் பேறானவன். நான் தன்னந் தனிமையாக இருந்தபோது, எனது ஆற்றலைப் பயன்படுத்தி என் உருவைப்போன்றே மனித உயிர்களைப் படைக்க வேண்டுமென விரும்பினேன். ஆனால் அவர்களின் உயிர் வாழ்க்கைக்காக பிற படைப்புகளை உருவாக்க வேண்டியிருந்தது. அதற்காகவே, உலகைப் படைத்தேன், மக்களி னத்துக்குத் தேவையான காற்று, கதிரவன், மழை மற்றும் மாந்தரின் உயிர் வாழ்வுக்குத் தேவையென நான் கருதிய அனைத்தையும் உலகத்தில் நிறைய வைத்தேன்.

இறுதியாகத்தான் மனிதனைப் படைத்தேன் அப்படைப்பைக் கண்டேன். பெருமகிழ்வு கொண்டேன். ஆனால் மனிதன் பாவத்தில் வீழ்ந்தான். அப்போது தான் எனது எல்லையற்ற இரக்கம் தன்னை வெளிக்காட்டியது.

**பழைய ஏற்பாட்டில் என் மக்களிடையே வாழ்வதற்காக இறைவாக்கினரைத் தேர்ந்து கொண்டேன். அவர்களிடம் என் ஆவல்களையும், துயரங்களையும், மகிழ்ச்சிகளையும் எடுத்துரைத்தேன். அவற்றை அவர்கள் மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென விரும்பினேன்.**

எவ்வளவுக்கு மக்களின் பாவம் பெருகியதோ அவ்வளவுக்கு எனது இரக்கமும் பெருகி என்னை நீதிமான்களுடன் கலந்தாடத் தூண்டியது. அவர்கள் நெறிகெட்ட மக்களுக்கு என் கட்டளைகளை அறிவுறுத்த வேண்டுமென எனது இரக்கம் எதிர்பார்த்தது. அதனால் அவர்களைத் திருத்துவதற்காக சில வேளை களில் நான் கட்டாயப்படுத்தப்பட்டேன். ஆனால், அவர்களைத் தண்டிப்பதற்காக அல்ல. ஒருவேளை நான் அவர்களைத் தண்டித்திருந்தால், அது அவர்களுக்குத் தீங்கிழைத் திருக்கும். ஆனால், நான் விரும்பியதெல்லாம், அவர்கள் தீமையை விலக்கித் தம்மைப் படைத்த தந்தையாகிய என்னிடமும் தங்களின் நன்றியின் மையால் மறக்கப்பட்டு, விலக்கப்பட்ட என்னிடமும் திரும்பி வரவேண்டும் என்பதுதான். ஆனால் மக்களின் உள்ளத்தில் தீமை எவ்வளவுக்குப் பலுகிப் பெருகிவிட்டதென்றால், நான் உலகின்மீது பேரிடர்களை அனுப்பக் கட்டாயப் படுத்தப்பட்டேன். அவற்றாலும் துன்ப துயரங்களும், பொருள் இழப்பாலும் உயிரிழப்பாலுங்கூட மக்கள் தூய்மை அடைய வேண்டும் என்பதே எனது நோக்கமாயிருந்தது. இப்பேரிடர்கள் தாம் பிரளயமாகும், சோதோம், கோமோராவின் அழிவாகும். நிகழ்ந்த



பரஸ்பர மனிதர் மத்தியில் ஒருவர் ஒருவருக்கிடையே நிகழ்ந்த போர்களாகும்.

**உலகில் மனிதரிடையே நான் வாழ வேண்டுமென்று எப்போதும் ஆவல் கொண்டுள்ளேன். எனவே தான் முற்காலத்தில், அப்போது வாழ்ந்த ஒரே நீதிமானாகிய நோவாவின் அண்மையிலிருந்தேன். மற்ற இன்னல்கள் நடுவிலும், ஒரு நீதிமானைத் தேர்ந்தெடுத்து அவனோடு இருந்திருக் கிறேன். அவன் மூலம் அப்போது வாழ்ந்த மக்களிடையே தங்கியிருந்தேன். இது போன்று எப்போதும் செய்து வந்திருக்கிறேன்.**

நான் மனித இனத்தின்பால் கொண்டிருக்கும் கருணையினால் உலகம் தனது தீமையிலிருந்து தூய்மையாக்கப்பட்டு வந்திருக்கிறது என் மனதுக்கேற்ற சில மனிதர்களைத் தொடர்ந்து தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் என் படைப்புக் களாகிய மனிதரிடையே நான் மகிழ்வோடு இருக்க முடிந்தது.

நான் உலகுக்கு ஒரு மெசியாவை வாக்களித்தேன். அவரது வருகைக்குத் தயாரிப்பதற்காக அவரைக் குறிக்கும் அடையாளங்கள் மூலம் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்பே நான் என்னை வெளிப்படுத்தினேன்.

அப்படி என்றால் மெசியா என்பவர் யார்? எங்கிருந்து அவர் வருகிறார்? அவர் உலகில் என்ன செய்யப் போகிறார்? அவர் யாருக்குப் பதிலாகயிருக்கிறார்? கடவுள்தான் மெசியா.

கடவுள் என்பவர் யார்? தந்தை மகன் தூய ஆவிதான் கடவுள். மெசியா எங்கிருந்து வருகிறார்? அவரை மனிதரிடையே வர பணித்தவர் யார்? அவருடைய தந்தையான கடவுளாகிய நானே.

உலகில் அவர் என்ன பணி ஆற்றப் போகிறார்? தந்தையாகிய கடவுளை வெளிப்படுத்தவும் அன்பு செய்யப்படவும் பணிபுரிவார். அவருடைய சொற்களை நீங்கள் கேட்டதில்லையா? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா? [லூக். 2.49].

"நான் என் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றவே வந்தேன்" என் பெயரால், தந்தையிடம் நீங்கள் கேட்பதெல்லாம் அவர் உங்களுக்கு தருவார்.

அவரிடம் நீங்கள் இவ்வாறு வேண்டுங்கள் விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே... மேலும் தம் தந்தையை மகிமைப்படுத்த அவரை உலகுக்கு வெளிப்படுத்த அவர் வந்ததால் அவர் மற்றொரு இடத்தில் கூறுகிறார்.

"என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும்" நான் தந்தையினுள் இருக்கிறேன். தந்தை என்னுள் இருக்கிறார். என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை [யோவான் 14:6]

"என்னில் நிலைத்திருப்பவர் என் தந்தையில் நிலைத்திருக்கிறார்."

மனிதர்களே ! மக்கள் என்னை அறிந்து அன்பு செய்ய வேண்டும் என்பதே காலங்கள் தோறும் எனக்கிருந்த ஒரே ஆவல் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். நான் எப்போதும் அவர்களோடிருக்க விரும்புகிறேன்.

நான் இப்போது எடுத்துச் சொன்ன ஆவலைப்பற்றிய அதிகாரப் பூர்வமான சான்று வேண்டுமா? எதற்காக நான் மோசேயிடம் ஒரு கூடாரத்தையும், உடன்படிக்கைப் பேழையையும் நிறுவச் சொன்னேன்? ஒரு தந்தையைப் போன்றும் என் படைப்புகளாகிய மக்களிடம் நான் வாழ வேண்டுமென்பதற்குத் தானே! இதுவே எனது பேராவல் இருந்த போதிலும், மனிதர் என்னை மறந்து விட்டனர். தங்களுடைய எண்ணற்ற பாவங்களால் என்னை மனம் வருந்தச் செய்தனர். தம் தந்தையாகிய கடவுளைப்பற்றி அவர்களுக்கு நினைவுறுத்துவதற்காக, தம்மை மீட்பது ஒன்றே அவரது ஒரே விருப்பம் என்பதை அறிவுறுத்துவதற்காக நான் மோசேயிடம் கட்டளைகளைக் கொடுத்தேன். அவற்றை அவர்கள் கடைபிடித்திருக்க வேண்டும். அதன் மூலம் அளவற்ற நல்ல தந்தையை எண்ணி தமது தற்போதைய மற்றும் வருங்கால மீட்பைப் பற்றி அக்கறை கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், மனிதர் இவற்றையெல்லாம் மறந்தனர். அறியாமையாலும், அச்சத்திலும் மூழ்கிக்கிடந்தனர். நான் மோசேயிடம் தந்த கட்டளைகள் கடைபிடிப்பதற்கு மிகக் கடினமானவை என்று அஞ்சிக் கொண்டிருந்தனர். தங்களது விருப்பத்திற்கிணங்க கடைப்பிடிக்க எளிமையான சட்டங்களை உருவாக்கிக் கொண்டனர். என்மீது கொண்ட அளவு கடந்த அச்சத்தினால், என்னை நாளடைவில் மறக்கத் தொடங்கினர். என்மீது அளவுக்கு மீறி பழி சுமத்தினர்.

எனினும் என் மக்களாகிய மனிதர்பால் நான் கொண்ட அன்பு ஒருபோதும் குறைந்ததில்லை. என்னை மனிதருக்கு வெளிப்படுத்தி அன்பு செய்யப்பட முயன்ற முதுபெரும் தந்தையரும் இறைவாக்கினரும் தோல்வியடைந்ததை உணர்ந்ததும், நானே மனிதரிடையே வருவதற்கு எண்ணங் கொண்டேன்.

எப்படி நான் மனிதரிடையே வர முடியும்? எனது கடவுள் தன்மையின் இரண்டாம் ஆளின் உருவில் நானாக வருவதைத்தவிர வேறு வழி எதுவுமிருக்க வில்லை.

மனிதர்கள் என்னைத் தெரிந்து கொள்வார்களா? எனக்கு அவர்கள் செவிமடுப்பார்களா? வருங்காலத்தைப்பற்றிய எதுவும் என்னிடமிருந்து மறைந்திருக்க முடியாது. எனவே நான் இவ்வினாக்களுக்கு விடை தர முன்வந்தேன்.

என் அண்மையில் அவர்களிருந்தபோதிலும், என்னை அவர்கள் கண்டுணர மாட்டார்கள். என் மகன் அவர்களுக்குச் செய்த நன்மைகளைக் கண்டும் கூட என் மகனில் என்னை அவர்கள் பெரும் துன்பத்துக்கு ஆளாக்குவார்கள். என் மகனில் என்னை தூற்றுவார்கள். என் உயிரைப் பறிப்பதற்காக என்னைச் சிலுவையில் அறைவார்கள்.

இதனிமித்தமாக நான் ஒன்றும் செய்யாது ஓய்ந்துவிடுவேனா? இல்லை! என் மக்களாகிய மனிதர் பால் நான் கொண்டிருக்கும் அன்பு அளப்பரிய அன்பல்லவா? நான் அத்தோடு நின்று விடவில்லை. என் மகனையும் ஏன் என்னையும்கூட நான் அன்பு செய்வதற்கு மேலாகவே உங்களை நான் அன்பு செய்தேன். இதை நீங்கள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.



நான் இப்போது சொல்லப்போவது முற்றிலும் உண்மை! என்னுடைய மகனைப் போன்றுத் தன் வாழ்வாலும் இறப்பாலும் என் படைப்புகளில் ஓர் உயிர் பிற மனிதரின் பாவங்களுக்குப் பரிகாரம் செய்வது போதுமென்றால் அதற்கு நான் பெரிதும் தயங்கியிருப்பேன் ஏன் தெரியுமா? என் மகனில் நான் துன்புறாமல், எனது அன்புக்குரிய ஓர் உயிரைத் துன்புறச் செய்தால் நான் என் அன்பைக் காட்டிக் கொடுத்து விடமாட்டேனா? என் மக்கள் துன்புறுவதை நான் ஒருபோதும் விரும்பமாட்டேன்.

இதுதான் சுருக்கமாக, என் மகன் வழியாக மனிதரிடையே நான் வருகை தந்தவரையில் நிகழ்ந்த என் அன்பின் கதையாகும். மனிதரில் பலருக்கு இந்நிகழ்ச்சிகள் நன்றாகத் தெரியும். எனினும் அன்புதான் அனைத்தையும் வழி நடத்தும் கருவி என்ற அந்நிகழ்ச்சிகளின் உட்பொருளை அவர்கள் உணரத் தவறிவிட்டனர்.

ஆம், இதுதான் அன்பு, இதையே உங்களுக்கு வலியுறுத்த விரும்புகிறேன். ஆனால், இப்போது அந்த அன்பு மறக்கப்பட்டுவிட்டது. அதை மீண்டும் உங்களுக்கு நினைவுறுத்தி, நான் இருப்பதுபோல என்னை நீங்கள் உணரக் கற்றுக் கொள்ள வேண்டுமென விரும்புகிறேன். மேலும் உங்களை அளப்பரிய வகையில் அன்பு செய்யும் தந்தைக்கு அடிமைகளைப் போன்று நீங்கள் அஞ்ச வேண்டாம் எனவும் வலியுறுத்துகிறேன்.

இக்கதையில், நாம் முதல் நூற்றாண்டின் முதல் நாளில் தானிருக் கிறோம் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். தற்காலமாகிய இருபதாம் நூற்றாண்டு வரையில் இதைக்கொண்டு வர விரும்புகிறேன்.

ஓ! மனிதர் என் தந்தைக்குரிய அன்பை மறந்து விட்டார்களே! எனினும் நான் உங்களை கனிவோடு அன்பு செய்து கொண்டேயிருக் கிறேன். மனித உருவெடுத்த என் மகனில் நான் என்னதான் செய்ய வில்லை! மனிதத்தன்மையில் கடவுள் தன்மை குறுகிவிட்டது, ஏழ்மையாகி தன்னைத்தாழ்த்திக்கொண்டது. என் மகனோடு இணைந்து நான் தொழில் செய்து, தியாக வாழ்வு நடத்தினேன். எதற்காக? மனிதர்கள் நீதிநெறியில் நடந்து தம் மீட்பைக் கண்டடைய அவர்களுக்கு நல்வழி காட்டத்தான்!

என் மக்களுடைய வலுவின்மை எனக்குத் தெரியாமலில்லை. அதனால்தான், தவறிவிட்ட மனிதர்கள் மீண்டும் எழுவதற்காக அவர் களுக்கு வழிமுறைகளைக் காட்டுமாறு என் மகனைக் கேட்டுக் கொண்டேன். இவ்வழிமுறைகள் அவர்களைப் பாவத்திலிருந்து கழுவித் தூய்மைப்படுத்த உதவி புரியும். அதனால், அவர்கள் என் அன்பு மக்களாக இருப்பர், அவ்வழிமுறைகளில் அருட்சாதனங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆனால், நீங்கள் தவறிய போதுங்கூட உங்கள் மீட்புக்கும், மிகப்பெரிய உறுதுணையாயிருப்பது சிலுவை தான். நீங்கள் விரும்பினால் ஒப்புரவு அருட்சாதனத்தின் மூலமும், திருப்பலியின் வழியாகவும் என் மகனுடைய திருஇரத்தம் எப்போதும் உங்களுக்காகச் சிந்தப்படும்.

என் அன்பு மக்களே! இருபது நூற்றாண்டுகளாக இச்சிறப்பான அருட் கொடைகளை நான் வாரி வழங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். ஆனால், அவற்றின் விளைவுகளோ பரிதாபத்துக்குரியவை!

என் மகன் மூலம் எனது அன்பின் மக்களாக மாறிய மனிதரில் பலர் மிக விரைவில் முடிவற்ற பாதாளத்துக்குச் சென்றுவிட்டார்களே! இவர்கள்

எல்லாம் எனது எல்லையற்ற இரக்கத்தை உண்மையாக உணராமல் போய்விட்டார்கள். நான் உங்களை எத்தனை அளவு கடந்து அன்பு செய்கிறேன் தெரியுமா?

ஆனால், மகளே! உன்னிடம் பேசுவதற்காக, மேலும் உனக்காக நான் உன்னை அன்பு செய்கிறேன் என்பதை உனக்கு உணர்த்துவதற்காக நான் வருகிறேன் என்பதை அறிந்த நீயாவது அப்பாதாளத்துக்குச் செல்ல மாட்டாய் என எதிர்பார்க்கிறேன். நான் உன் தந்தை!

என்னை உங்கள் தந்தை என அழைத்து என் மீது அன்பு செலுத்தியபின், உங்களை அழிவுறச் செய்ய எனது இதயம் உணர்ச்சியற்று இறுகி விட்டது என உங்களால் எப்படிக் கருத முடியும்? இல்லை! அப்படிக் கருத வேண்டாம். எல்லாத் தந்தையரிலும் தலைசிறந்த தந்தையல்லவா நான்?எனவே,என் படைப்பாகிய மாந்தரின் வலுவின்மையை நன்றாகவே அறிவேன்.ஆதலால் அன்போடும் நம்பிக்கையோடும், என்னிடம் வாருங்கள்.நீங்கள் மனமாற்றம் அடைந்தபின் உங்களை மன்னித் தருளுவேன்.உங்கள் பாவங்கள் புழுதியைப் போன்று வெறுக்கப்பட்ட தாயிருந்தாலும், நீங்கள் என்பால் கொண்ட அன்பும், நம்பிக்கையும் என்னை அவற்றை மறக்கச் செய்யும். நான் நீதியுள்ளவன். எனவே உங்களைத் தீர்ப்பிடமாட்டேன். இது உண்மை!ஏனெனில் என் அன்புதான் அனைத்தையும் ஆளுகின்றது.

என் மக்களே! ஒப்புவமை ஒன்றைக் கூறுகிறேன் கேளுங்கள். இதை கேட்டபின் நீங்கள் எனது அன்பின் மீது பற்று கொள்வீர்கள். உங்கள் பாவங்கள் இரும்பைப்போன்றவை, உங்கள் அன்போ பொன்னைப் போன்றது. நீங்கள் எனக்கு ஆயிரம் கிலோ இரும்பைக் கொடுத்தீர்கள் என்றால் அது பத்து கிலோ பொன்னைக் கொடுத்தது போலிருக்குமா? அதலால் சிறிதளவு அன்பே போதும், பெருமளவில் பாவங்களுக்கு பரிகாரம் செய்ய!

இந்த ஒப்புவமை, அனைத்து மக்கள் மீதும், பாவப்பரிகாரமின்றி நான் செலுத்தும் நீதிக்கு அவ்வளவு பொருத்தமில்லாமலிருக்கலாம். எனினும் நான் உங்களுக்கு அன்மையிலிருப்பதால், நீங்கள் என்னிடம் வர வேண்டும். நீங்கள் தீர்ப்படையாதபடி என்னை அன்பு செய்து மகிமைப் படுத்துங்கள். அப்படி தீர்ப்பிடப்பட்டால் எனது கனிவுமிக்க அன்பால் தீர்ப்பிடப்படுவீர்கள்.

எனது உள்ளம் இவ்வாறில்லாதிருந்தால், ஒவ்வொரு முறையும் பாவத்தில் ஈடுபடும்போது உலகை என்றோ நான் அழித்திருப்பேன் இதைப் பற்றி நீங்கள் ஐயப்பட வேண்டாம். ஆனால், நீங்கள் காண்பதுபோல், எனது பாதுகாவல் அருட்கொடை மூலமாகவும் நன்மைகள் மூலமாகவும், தன்னை எப்போதும் வெளிப்படுத்தி வந்திருக்கிறது. இதிலிருந்து எல்லாத் தந்தையருக்கும் மேலாக ஒரு தந்தை நீங்கள் விரும்பினால், உங்களை அன்பு செய்கிறார் என்பதையும், அவரது அன்பு என்றும் முடிவுறாது என்பதையும் நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சிலுவை மற்றும் நற்கருணை இவை இரண்டின் மூலமாகத்தான் நான் உங்களிடம் வருகிறேன். சிலுவையின் மூலமாக நான் என் மக்களிடையே வருகை தந்தேன். ஏனெனில், என் மகனை அதன் மூலமாகவே உங்களை



மீட்கச் செய்தேன். அது உங்களுக்கு, என் மகனை வந்தடையவும் அவர் மூலமாக என்னிடம் வந்து சேரவும் வழிகாட்டுகிறது. அதைத்தவிர்த்து நீங்கள் என்னிடம் வந்தடைய முடியாது. ஏனெனில் மனிதன் தன் பாவத்தினால், கடவுளிடமிருந்து பிரிந்து செல்லும் தண்டனையைப் பெற்றுக் கொண்டான்.

நற்கருணையில், ஒரு தந்தை தன் குடும்பத்தோடு வாழ்வது போல, நான் உங்களிடையே வாழ்கிறேன். ஒவ்வொரு நற்கருணைப்பேழையும் என் கொடைகளாலும், செவ்வகங்களாலும் அன்பாலும் மக்களுக்காக நிறைந்து வழியும் பாத்திரமாக அமைந்திட என் மகனை நற்கருணையை ஏற்படுத்தப் பணிந்தேன்.

எப்போதும் இவ்விரு வழிகளால் தாம், என் ஆற்றலும், எல்லையற்ற இரக்கமும், மனிதர் மீது பொழியப்பட்டு வந்திருக்கின்றன. மனிதரிடையே என் மகன் எனக்குப் பதிலாக இருக்கிறார் என்பதையும், அவர் மூலம் நான் என் மக்களிடையில் வாழ்கிறேன் என்பதையும் வலியுறுத்தியபின், எனது தூய ஆவியினால் நான் உங்களிடையே வருகிறேன் என்பதைத் தெளிவுறுத்த விரும்புகிறேன்.

எனது கடவுள் தன்மையின் இம்மூன்றாவது ஆள் தமது பணியை அமைதியாக ஆற்றுகிறார். ஆகவே மனிதர் அதைப் பல நேரங்களில் அறிந்து கொள்வதில்லை. நற்கருணைப் பேழையில் மட்டுமல்ல, அருள் வாழ்விலிருக்கும் ஆன்மாக்களின் உள்ளத்தில் நான் வாழ்வதற்கு இது மிகப் பொருத்தமான வழியாகும். இதனால் அவ்வான்மாக்களில் எனது அரியணையை நிறுவி அதிலே எப்போதும் வாழ முடிகிறது. ஓர் உண்மைத் தந்தையைப் போல் அவ்வான்மாக்களை அன்பு செய்யவும் உதவி நலகி ஆதரிக்கவும் முடிகிறது.

அனைத்து நல்லோரும் தீயோரும் எனது தெய்வீக, மற்றும் தந்தைக்குரிய இதயத்தை அறிந்து அன்பு செய்து மகிமைப்படுத்த வேண்டுமென்ற எனது எல்லையற்ற ஆவலை இதுவரை யாருமே புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. இம்மூன்று கொடைகளைத் தாம், நான் மனிதரிடமிருந்து ஆராதனையாகப் பெற விரும்புகிறேன். அதனால், மிகவும் கொடியப்பாவிகளுக்குக்கூட நான் எப்போதும் இரக்கம் காட்ட முடிகிறது.

மனிதர்கள் தந்தையும், படைத்தவரும் மீட்பவருமாகிய எனக்குரிய சிறப்பான மகிமையைத் தரும்படியாக, ஆதாம் முதல் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாக இதுவரை, இசையின் காலமுதல் தற்போதை காலம் வரை என் மக்களுக்கு நான் எதைத் தான் செய்யாமல் விட்டுவிட்டேன்!

கடவுளை மக்கள் சிறப்பான முறையில் வழிபடவேண்டுமென விடுதலைப் பயணநூலில் நீங்கள் படிக்கிறீர்கள் சிறப்பாக தாவீதின் திருப்பாடல்கள் இப்படிப்பினையை எடுத்துச் சொல்கின்றன. ஒரே ஒரு கடவுளை மட்டும் நீங்கள் வழிபட்டு நிறைவாக அன்பு செய்ய வேண்டும் என்பதை நான் மோசேயிடம் தந்த கட்டளைகளில் வலியுறுத்தியுள்ளேன்.

எனவே, அன்பு செய்வதும் மகிமைப்படுத்துவதும் இணைந்து செல்ல கூடியவை. நான் உங்கள்மீது அளப்பரிய கொடைகளை வாரி வழங்கியிருப்பதால், நீங்கள் என்னை சிறப்பான முறையில் மகிமைப்படுத்த வேண்டும். உங்களுக்கு வாழ்வு தர உங்களை எனது உருவில் படைக்க

ஆவல் கொண்டேன். எனவே எனது இதயத்தைப் போன்று உங்களிதயமும், உங்கள் இதயத்தைப் போன்று என்னிதயமும் நேய உணர்வால் நிறைந்திருக்கின்றன.

உங்கள் அண்டை வீட்டார் உங்களுக்கு ஒரு சிறிய உதவியைச் செய்யும் போது நீங்கள் அவர்களுக்கு என்னதான் செய்யாதிருப்பீர்கள்! மனிதநேயமேயற்ற ஒரு மனிதன்கூட தனக்குச் செய்யப்பட்ட ஓர் உதவிக்காக என்றும் நன்றியுள்ள வராயிருப்பானே! தான் பெற்ற உதவிக்கு எந்த ஒரு மனிதனும் ஏதாவது நல்லது செய்து தனக்கு உதவி செய்தவருக்கு மகிழ்ச்சியைத்தருவதில்லையா? என் விருப்பத்திற்கிணங்க, என்னை மகிமைப்படுத்தும் சின்னஞ் சிறிய நன்மையைக்கூட நீங்கள் செய்தால், உங்களுக்கு நிலைபேறான வாழ்வை வழங்குவதன் மூலம் நான் எவ்வளவு நன்றியுள்ளவனாகயிருப்பேன் தெரியுமா!

என் மகனில் என்னை நீங்கள் மகிமைப்படுத்துவதை நான் அறிவேன். மேலும் சிலர் என் மகன் வழியாக தம்மிடம் உள்ள அனைத்தையும், எனக்கு அர்ப்பணிப்பதையும் அறிவேன். ஆனால் அவர்களோ மிகச் சிலரே! நீங்கள் என் மகனை மகிமைப்படுத்துவதால் என்னை மகிமைப்படுத்துவதில்லை என்று எண்ணக்கூடாது. அவ்வாறு செய்வதால் நீங்கள் என்னையே மகிமைப்படுத்து கிறீர்கள். ஏனெனில், என் மகனில் நானிருக்கிறேன். அவரது மகிமைக்குரியவை எல்லாம் எனது மகிமைக்கும் உரியவையே.

ஆனால் மனிதன், தன்னைப் படைத்தவரும், தந்தையுமான என்னை ஒரு சிறப்பான பக்தியோடு மகிமைப்படுத்த வேண்டுமென விரும்புகிறேன். எவ்வளவு அதிகமாக நீங்கள் என்னை மகிமைப்படுத்துகிறீர்களோ, அவ்வளவுக்கு அதிகமாக என் மகனையும் மகிமைப்படுத்துகிறீர்கள். ஏனெனில் என் விருப்பத்திற்கிணங்கியே, அவர் மனித உருவெடுத்த வாக்கானார், தம்மை அனுப்பிய வரை வெளிப்படுத்தவே உங்களிடையே வந்தார்.

நீங்கள் என்னை அறிந்து கொண்டால், என்னையும் என் மகனையும், இப்போது அன்பு செய்வதைவிட அதிகமாகவே அன்பு செய்வீர்கள். மீட்பின் மறைபொருளால் என்னுடைய மக்களானவர்களில் பலர், நான் என் மகன் வழியாக எல்லோருக்காகவும் பசுமை நிலங்களைத் தவிர்த்து விலகிவிட்டார்களே! மேலும் உங்களுக்குத் தெரிந்தது போல இன்னும் பலர் அப்பசுமை நிலங்கள் இருப்பதையே அறியாமலிருக் கிறார்களே! என் கரங்களால் உருவாக்கப்பட்ட பல மக்கள் தம்மை உருவாக்கிய கரங்களையே அறிவதில்லை. இவர்களிருப்பது எனக்கு தெரியும். ஆனால் உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம்.

என் நன்மைகளால் நான் உங்களுக்கும், மேற்சொன்ன மக்களுக்கும் எல்லாம் வல்ல தந்தையாயிருக்கிறேன் என்பதை நீங்கள் உணர வேண்டுமென எவ்வளவோ ஆசிக்கிறேன் தெரியுமா! எனது சட்டங்களால் அவர்களது வாழ்வை மேலும் இனிமையாக்க விரும்புகிறேன். எனது பெயரால் நீங்கள் அவர்களிடம் சென்று என்னைப்பற்றி அறிவிக்க வேண்டும். அவர்களுக்கு ஒரு தந்தையாயிருக்கிறார் எனக் கூறுங்கள். அவர்களைப் படைத்தபின், அவர்களுக்கு தம் கொடைகளை வாரி வழங்க அவர் விரும்புகிறார் என்றும் சொல்லுங்கள். அனைத்துக்கும் மேலாக நான்



அவர்களை நினைத்து அன்பு செய்கிறேன். அவர்களுக்கு முடிவில்லா மகிழ்வைத் தர விரும்புகிறேன் என்று அறிவுறுத்துங்கள், அந்நிலையில் மனிதருடைய மனமாற்றம் விரைவில் நிகழும் என வாக்களிக்கிறேன். நீங்கள் மட்டும் ஆதித்திருச்சபையின் காலத்திலிருந்தே என்னை தனிச்சிறப்பான பக்தியால் மகிமைப்படுத்தி வந்திருந்தால், இருபது நூற்றாண்டு களுக்குப்பின் மிகச்சிலரே சிலை வழிபாட்டிலும் புற இனத்தவரின் மதங்களிலும், தவறான தீய வழிபாட்டுக் குழுக்களிலும் உழன்று கொண்டிருந்திருப்பார். இவற்றால் பல மனிதர்கள் நித்திய நரகத்தில் தள்ளப்படுகின்றனர். இவர்களுக்கெல்லாம் நீங்கள் எவ்வளவோ பணிபுரிய வேண்டியிருக்கிறது.

எனது நேரம் நெருங்கி வந்து விட்டது. என்னை மனிதர்கள் அறிந்து அன்பு செய்து மகிமைப்படுத்த வேண்டும். அதனால், அவர்களைப் படைத்த நான் அவர்களுடைய தந்தையாகவும், பின் மீட்பராகவும் இறுதியில் அவர்களது பேரின்பமாகவுமிருப்பேன்.

இதுவரை உங்களுக்கு தெரிந்தவற்றையே நான் சொல்லி வந்திருக் கிறேன். அவற்றை மீண்டும் நினைவுறுத்துகிறேன். அதனால், நான் ஒரு நல்ல தந்தையென்றும், நீங்கள் கருதுவது போல் அச்சத்துக்குரியவர் அல்ல என்றும், வாழுகின்ற மாந்தருக்கெல்லாம், மேலும் உலக முடியும் வரை நான் படைக்கயிருக்கும் எல்லா மனிதருக்கும் தந்தை எனவும் நீங்கள் உறுதியாக உணர்ந்து கொள்வீர்கள்.

மனிதர்பால் நான் கொண்டிருக்கும் எல்லையற்ற இரக்கத்தை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்களாக, சிறப்பாக பாவிகள், நோயாளிகள், சாவின் பிடியிலிருப்ப வர்கள் மற்றும் வேதனையுறும் அனைவர் மீதும் எனது இரக்கம் பொழியப்படுகிறது என்பதையும், அனைவரும் அறிந்து கொள்ளட்டும். எல்லா மனிதரையும் அன்பு செய்து, அவர்களுக்கு அருட் கொடைகளை ஈந்து, அவர்கள் மனந்திரும்பும் போது அவர்களை மன்னித்து அனைத்திற்கும் மேலாக அவர்கள் நீதியோடல்லாமல் இரக்கத்தோடு தீர்ப்பிடுவேன். அதனால், எல்லோரும் மீட்கப்பட்டு தேர்ந்து கொள்ளப்பட்டோரின் குழுவில் இடம் பெறுவர். இது ஒன்றையே நான் விரும்புகிறேன் என்று அனைவரும் உணர்ந்து கொள்ளட்டும்.

இச்சிறிய விபரத்தை முடிப்பதற்கு முன் மகனே! நித்திய விளைவை ஏற்படுத்தும் ஒன்றை எனக்கு நீ வாக்களிக்க வேண்டும். அது இதுவே! நீ என்னை தந்தை என்று அன்புடனும், நம்பிக்கையுடனும் அழைக்க வேண்டும். அத்தந்தையும் அன்போடும், இரக்கத்தோடும் உனக்கு அனைத்தையும் அருளுவார்.

என் மகனாகிய உன் ஞானத் தந்தை, எனது மகிமைக்காகப் பணியாற்றி நான் உனக்கும் பணித்தவற்றையே ஒன்றும் விடாமல் எதையும் சேர்த்து கொள்ளாமல் சொல் பிறழாமல் எழுதி வைக்கப்படும். அதனால் மனிதர் அவற்றை எளிதாக இனிமையாக படித்தறிய முடியும்.

மகனே! மாந்தருக்காக நான் கொள்ளும் ஆசைகள், என் மகிழ்வுகள், என் துயரங்கள் இவைபற்றி நாளுக்கு நாள் உன்னோடு உரையாடுவேன். அனைத்திற்கும் மேலாக மாந்தருக்கு எனது எல்லையற்ற இரக்கத்தையும், எனது கனிவுமிக்க அன்பையும் வெளிப்படுத்துவேன்.

மகனே! நீ நாள்தோறும் அரைமணிநேரம் என்னோடிருந்து என்னை அன்பு செய்து எனக்கு ஆறுல் அளிக்குமாறு உன் தலைவர்கள் உனக்கு அனுமதி தர வேண்டுமென, விரும்புகிறேன். அதனால் என் மக்களாகிய மனித உள்ளங்கள், நான் உனக்கு தற்போது வெளிப்படுத்திய பக்தியைப் பரப்ப முன் வருவார்கள். இவ்வாறு, தம் மக்களால் அன்பு செய்யப்பட விரும்பி தந்தையின் பால் நீ பெரும் நம்பிக்கை கொள்ள முடியும்.

எவ்வகைத் தவறுமின்றி இப்பணி விரைவில் எல்லா இனத்தவரிடையே ஆற்றப்படுவதற்காக மகனே! உன் நாட்களை தியான உணர்வோடு கழிக்க வேண்டுமென உன்னைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தவரோடு குறைவாகப் பேசுவதால் நீ மகிழ்ச்சியடைவாய். மற்றவரோடு இருக்கும்போதுகூட உனது உள்ளத்தில் என்னோடு பேசி எனக்குச் செவிமடுப்பாய்.

நான் உன்னோடு உரையாடும்போது கூறும் கருத்துக்களை ஒரு நாட்குறிப்பேட்டில் நீ எழுத வேண்டுமென விரும்புகிறேன். அக்குறிப்பேட்டின் மூலம் அனைவரோடும் நான் உரையாடவேண்டுமென ஆசிக்கிறேன். ஏனெனில் ஒரு தாய் தன் பிள்ளைகளோடு நெருங்கியிருப்பதைவிட நான் என் மக்களாகிய அனைவரோடும் மிக நெருக்கமாயிருக்கிறேன்.

**மனிதனைப் படைத்ததிலிருந்து, ஒரு நிமிடம்கூட நான் அவனைவிட்டுப் பிரிய வில்லை. அவனைப் படைத்த தந்தை என்ற முறையில் நான் அவனை அன்பு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு அவன் தேவைப்படுகிறான் என்பதல்ல, ஆனால், அவனைப் படைத்த தந்தை என்ற முறையில் எனது அன்பு மனிதனை அன்பு செய்யும் தேவை உணர்த்துகிறது. அவனை எல்லா இடத்திலும் பின் தொடர்ந்து, அனைத்து வகைகளிலும், உதவிபுரிந்து, அவனது தேவைகளை நிறைவு செய்கிறேன்.**

மனிதனின் தேவைகளையும், உழைப்பையும், ஆசைகளையும் நான் அறிவேன். அவனுக்கு உதவியளித்து அவனைக் காப்பாற்றுவதில் என்னுள்ளம் பெரு மகிழ்வடைகிறது.

மனித இனம் முழுவதையும் நரகத்தில் ஆழ்த்தப்படுவோருக்கும், ஓர் அச்சத்துக்குரிய கடவுளாக என்னை மனிதர் கருதுகின்றனர். ஆனால், முடிவற்ற தண்டனைக்கு தீர்ப்பிடப்படுபவராகக் கருதப்பட்ட பலர், இறுதியில் எல்லையற்ற பேரின்பத்தைத் தேர்ந்தெடுக்கப்பட்டவரோடு அனுபவிப்பதைக் காண்பது எவ்வளவோ வியப்பாகயிருக்கும்.

தம்மைக் கண்காணித்து, தம்மை இம்மையில் நித்திய பேரின்பத்தின் முன் சுவையை அனுபவிக்க வேண்டுமென விரும்பும் ஒரு தந்தையிருக்கிறார் என்பதை எல்லா மாந்தரும் உணர வேண்டுமென நான் ஆவல் கொள்கிறேன்.

தான் ஈன்றெடுத்த மகனை எந்தத் தாயும் மறப்பதில்லை. அதில் வியப்பேதுமில்லை! என்பதில் சிறிதேனும் வியப்பில்லை.

நான் ஈந்த மகனை ஒரு தாய் அன்பு செய்கிறாள் என்றால் அதைவிட நான் என் மக்களை அன்பு செய்கிறேன். ஏனெனில், நானே அவர்களை உருவாக்கினேன் அல்லவா!



ஒரு சில குறைகளினிமித்தம் ஒரு தாய் தன் மகனை குறைவாக அன்பு செய்தாலும், நான் அவனை முழுமையாக அன்பு செய்வேன். அத்தாய் காலப்போக்கில் தன் மகன் வயதில் வளர்ந்து விட்டான். தற்போது தனது ஆதரவில் அவனில்லை என்பதற்காக அவனை மறக்கலாம் அல்லது அரிதாக அவனைப் பற்றி நினைக்கலாம். ஆனால் நானோ அவனை ஒருபோதும் மறப்பதில்லை. அவன் என்னை மறந்தாலும் நான் அவனை எப்போதும் நினைத்து அவன்மீது அன்பு செலுத்துவேன்.

**நீங்கள் இம்மையிலேயே மறுமை இன்பத்தைச் சுவைக்க வேண்டும் என நான் விரும்புகிறேன் என உங்களுக்கு முன்பே கூறியிருக்கிறேன். எனினும் அதன் உண்மைப் பொருளை நீங்கள் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அது இது தான்...**

என்னை நீங்கள் அன்பு செய்து என்னை தந்தை என்ற இனிய பெயரால் அழைக்கும்போது, இம்மையிலேயே, என்மீது அன்பும் நம்பிக்கையும் கொண்டு வாழ்வீர்கள். அது உங்களுக்கு நித்தியத்திற்கும், மகிழ்வைத்தரும். நீங்களும் தேர்ந்துகொள்ளப்பட்டவரின் குழுவில் இணைந்தும் விண்ணகத்தில் மகிழ்ச்சிக் கீதம் பாடுவீர்கள். இது முடிவற்ற விண்ணக இன்பத்தின் முன் சுவையல்லவா?

மேலும் மனிதனிருக்கும் இடத்திலே நானுமிருக்கிறேன் என்பதை எல்லாரும் உணர வேண்டுமென விரும்புகிறேன். நான் அவனோடு இல்லை என்றால், மனிதன் தான் இருப்பது போல ஒருபோதும் இருக்க முடியாது, மனிதன் என்மீது நம்பிக்கையற்று இருந்தாலுங்கூட, நான் என்றும் அவனோடு இருக்கிறேன்.

இந்த எனது திட்டம் நிறைவேற்றப்பட எவ்வளவு ஆவலாயிருக்கிறேன் தெரியுமா! இதுவரை மனிதன் தன் தந்தையாகி கடவுளுக்கு நான் கூறப்போவதைப்பற்றிய மகிழ்வை தரவேண்டுமென எண்ணியதேயில்லை. மனிதனிடையிலும், அவனுடைய விண்ணகத் தந்தையிலும், ஆழ்ந்த நம்பிக்கை நிலவ வேண்டுமென விரும்புகிறேன். அதே வேளையில் ஒரு பரஸ்பரமனப்பான்மையும், இனிய நேயமும் நிலவ வேண்டும். அதனால், மனிதன் எனது இரக்கத்தைப் பற்றி ஒரு மெத்தனப் போக்கைக் கொள்ள மாட்டான்.

உங்களுடைய தேவைகள், ஆசைகள் மற்றும் உள்ளத்திலிருக்கும் அனைத்தையும் நான் அறிவேன். ஆனால், ஒரு மகன் தன் தந்தையிடம் நம்பிக்கை கொள்வதுபோல் , நீங்களும் உங்கள் தேவைகளில் என்மீது முழு நம்பிக்கையோடு என்னிடம் வந்தால் நான் எவ்வளவோ மகிழ்வும், நன்றி உணர்வும் கொள்வேன் தெரியுமா? நீங்கள் கேட்கின்ற மிகச்சிறிய மற்றும் மிகப்பெரிய தேவைகளை நான் நிறைவேற்றாமலிருப்பேனா? நீங்கள் என்னைக் காண்பதில்லை என்றாலும் உங்களுடைய நிகழ்வுகளில் நான் உங்களுக்கருகில் இருப்பதை நீங்கள் உணருவதில்லையா? என்னைக் காணாமலே நீங்கள் என்னை விசுவாசத்திற்காக உங்களுக்கு எவ்வளவு கைமாறு கிடைக்கும் தெரியுமா?

**இப்போதுகூட நான் என் ஆளுமையில் உங்களோடு இருந்து உரையாடிக் கொண்டிருக்கிறேன். என்னை நீங்கள் அறிவது, அன்பு செய்து, ஒரு சிறப்பான பக்தியால் என்னை மகிமைப்படுத்த வேண்டுமென கேட்டுக்**

கொண்டிருக்கிறேன். எனினும் நான் யாரோடு பேசிக்கொண்டிருக் கிறேனோ, அவளைத்தவிர என்னை நீங்கள் காண முடிவதில்லை. என்னைக் காண்பதற்கு மனித இனத்திலே ஒருத்தி மட்டும் இருக்கிறாள்! இருந்த போதிலும், நான் உங்களோடு உரையாடிக் கொண்டிருக்கிறேன். நான் பார்த்து பேசிக் கொண்டிருக்கும் அவள் மூலம் உங்கள் அனைவரையும் காண்கிறேன், உங்கள் ஒவ்வொருவரிடமும் உரையாடிக் கொண்டிருக் கிறேன். நீங்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருப்பது போல் எண்ணி உங்களை அன்பு செய்கிறேன்.

மனிதர் என்னை அறிய வேண்டும், மேலும் நான் அவர்கள் ஒவ்வொருவரின் அருகிலும் இருக்கிறேன் என்பதை அவர்கள் உணர வேண்டுமென விரும்புகிறேன். மனிதர்களே! நான் மனித இனத்தின் நம்பிக்கையாக இருக்கிறேன் என்பதை உணருங்கள். நான் அப்படி இருப்ப தில்லையா? நான் மனிதரின் நம்பிக்கையாக இல்லாவிடில் மனித இனம் எப்போதோ அழிந்திருக்கும்! ஆனால் நான் மனிதரின் நம்பிக்கையா யிருக்கிறேன் என்பதை எல்லாரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதனால் மனித உள்ளத்தில் அமைதி நம்பிக்கை மற்றும் அன்பு நிறைந்து, வானகத் தந்தையின் உறவில் அவர்கள் இவ்வுலகிலேயே திளைக்க முடியும்.

ஓவியங்களில் தீட்டப்பட்டிருப்பதுபோல நான் ஓர் அச்சமூட்டும் முதியவனல்ல. மேலும் நான் என் மகனையும், என் தூய ஆவியையும்விட இளைஞனும் அல்ல, முதியவனுமல்ல.

இதனிமித்தம் இளைஞரும் முதியவரும் என்னை யாவரும் அறிந்த பெயரான தந்தை மற்றும் நண்பன் என்ற பெயரால் அழைக்க வேண்டுமென விரும்புகிறேன். ஏனெனில் நான் என்றும் உங்களோடிருக்கிறேன். என்னைப் போல உங்களை மாற்ற நான் உங்களைப் போலிருக்கிறேன். குழந்தைகள் என்னைத் தந்தை என்ற பெயரால் அழைக்க பெற்றோர்கள் அவர்களுக்கு கற்றுத் தந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்! நான் ஒரு தந்தைதானே! என்மீது பிள்ளைக்குரிய அன்பும் நம்பிக்கையும் கொள்ள வேண்டுமென்ற கருத்தை இவ்விள உள்ளங்களில் விதைக்க வேண்டுமென விரும்புகிறேன். நான் உங்களுக்கு எவ்வளவோ செய்திருக்கிறேன். நீங்கள் எனக்கு இதைச் செய்யமாட்டீர்களா?

நான் எனது அரசிலிருப்பது போல எல்லா குடும்பங்களிலும், எனது ஆட்சியை நிறுவ விரும்புகிறேன். அதனால், எங்களுக்கு எல்லையற்ற இரக்கமும் அளவற்ற செல்வமும், எண்ணற்ற நன்மைகளும் கொண்ட ஒரு தந்தையிருக்கிறார் என்று அனைவரும் உறுதியாகக் கூற முடியும். அவர் எங்களைப்பற்றி நினைத்து எங்களுக்கு அருகிலிருக்கிறார். எங்களைப் பாதுகாத்து, நாங்கள் கேட்கும் அனைத்தையும் தருகிறார். அவருடைய செல்வங்கள் எல்லாம் எங்களுக்குரியவை. எனவே எங்களுக்குத் தேவையான எல்லாம் எங்களிடமிருக்கின்றது என அவர்கள் பெருமை பாராட்டமுடியும். உங்களுக்குத் தேவையானவற்றை நீங்கள் என்னிடம் கேட்க வேண்டும் என்பதற்காகவே நானிருக்கிறேன். "கேளுங்கள் கொடுக்கப்படும்."எனது தந்தைக்குரிய கருணையினால் உங்களுக்கு அனைத்தையும் அருளுவேன், ஆனால் ஒரு நிபந்தனை, நீங்கள், தன் குடும்பத்திலிருக்கும் ஒரு உண்மைத் தந்தை போன்று என்னைக் கருத வேண்டும்.



எல்லாக் குடும்பங்களிலும் நான் என் சிறிய மகளுக்குக் எடுத்து காட்டாயிருக்கும், எனது திரு உருவப்படம் சிறப்பான ஓரிடத்தில் நிறுவப்பட வேண்டுமென ஆசிக்கிறேன். அனைத்துக் குடும்பங்களும், எனது தனிப் பாதுகாவலில் வைக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். அதனால் என்னை அவைகள் எளிதாக மகிமைப்படுத்த முடியும். அவ்விடத்தில் குடும்பங்கள் நாள்தோறும் தம் ஆசைகள், தேவைகள், அலுவல்கள் மற்றும் இன்ப துன்பங்களை என்னோடு பகிர்ந்துகொள்ள வேண்டும். ஏனெனில் ஒரு தந்தை தன் மக்களுக்குத் தேவையான அனைத்தையும் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா? எனக்கு அவைகள் தெரிந்தபோதிலும், நான் அங்கிருப்பதால், என் மக்கள் என்னிடம் அவற்றைத் தெரிவிக்கும்போது அவர்களிடம் விளங்கும் எளிமையை நான் விரும்புகிறேன். உங்களுடைய நிலைகளுக்குத் தகுந்தவாறு நான் என்னை எளிதில் அமைத்துக்கொள்ள முடியும். குழந்தைகளோடு குழந்தையாக, வயது வந்தவரோடு வயது வந்தவனாக முதியவரோடு, முதியவனாக நான் விளங்க முடியும். அதனால் தமது அர்ச்சிப்புக்காகவும், எனது மகிமைக்காகவும், நான் அவர்களுக்கு அறிவிப்பதை அவர்கள் எளிதில் கண்டுணர முடியும்.

தம்மை உங்களைப்போன்று தாழ்த்தி எளிமையின் கோலங்கொண்ட என் மகன் நான் கூறுபவற்றிற்கு சான்று தரவில்லையா? ஏன், நான் இப்போது உங்களோடு உரையாடிக் கொண்டிருக்கிறேனே அதுவும் நல்ல சான்று தானே! உங்களைப் போன்ற ஓர் எளிய உயிரைத் தேர்ந்தெடுத்துக் கிறேன். எதற்காக? உங்களோடு அளவளாவி நான் விரும்புபவற்றை உங்களுக்கு அறிவுறுத்தத் தானே! இப்போது, நான் உங்களைப் போன்றே என்னை மாற்றிக்கொள்ள வில்லையா?

இதோ பாருங்கள்! எனது மகுடத்தை என் காலடியில் வைத்து விட்டேன். உலக உருண்டையை என் மார்போடு அனைத்துக் கொண்டிருக் கிறேன். எனது மகிமையை விண்ணகத்தில் துறந்துவிட்டு ஏழைகளோடு ஏழையாக, செல்வந்தரோடு செல்வந்தனாக, மாறி இங்கு வந்திருக்கிறேன். இளம் பருவத்தினரை ஒரு கனிவுமிக்கத் தந்தையைப் போன்று பாதுகாக்க விரும்புகிறேன். உலகில் தீமைகள் மலிந்துவிட்டன. ஏதுமறியாத இந்த இளம் பருவத்தினர் அனுபவமற்றதால், தீமையின் மாயக் கவர்ச்சிக்குத் தங்களை ஆளாக்கி சிறிது, சிறிதாக அழிவின் நிறைவுக்கே சென்றுவிடு கின்றனர். தீமையை விலக்குவதற்காக, அடுத்தவரின் உதவியை நாடியிருப்பவராகிய நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள் எந்த ஓர் உயிரும் உங்களை அன்பு செய்ய முடியாத அளவுக்கு, உங்கள் மீது அன்பு கொள்ளும் தந்தை நான். எனவே என்னிடம் வந்து அடைக்கலம் தேடுங்கள். உங்களுடைய சிந்தைகள் மற்றும் ஆசைகளை என்னிடம் அர்ப்பணித்து விடுங்கள். உங்களை நான் கனிவோடு அன்பு கூர்வேன். தற்போது உங்களுக்கு அருள் வளம் ஈந்து வருங்காலத்தில் உங்களை ஆசீரால் நிரப்புவேன். உங்களைப் பணித்தபின் பத்து, இருபது, முப்பது ஆண்டு களுக்குப்பின் உங்களை நான் மறந்துவிடுவேன் என ஐயங்கொள் கிறீர்களா? இல்லை! எனவே வாருங்கள் உங்களுக்கு கனிவும் எல்லையற்ற இரக்கமும் கொண்ட ஒரு தந்தை மிகத் தேவைப்படுகிறார் என்று எனக்குத் தெரிகிறது!

பிற்காலத்தில் நான் கூறப்போகும் முக்கியமான காரியங்களைப் பற்றி இப்போது உரையாடாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட என் அன்பின் மக்களாகிய குருக்கள், துறவிகளோடு தற்போது உரையாட விரும்புகிறேன். அவர்களுக்கென பல அரிய திட்டங்கள் உள்ளன.

# திருத்தந்தைக்கு

இப்பணியை உம்மிடம் தருவதற்காக, மற்ற அனைவரையும் விட என் அன்பு மகனும் என் பதிலாளருமான உம்மிடம் நான் வருகிறேன். உம் அலுவல்களில் எல்லாம் இப்பணி சிறப்பான இடம் வகிக்க வேண்டும். மேலும் இக்காலத்தில் தான் அது நிறைவேற்றப்பட வேண்டும். ஏனெனில் அலகையின் அச்சம் மனிதரை இப்போது அலைக்கழித்துக் கொண்டிருக் கிறது.

இப்பணியின் முக்கியத்துவத்தையும், அதனுடைய நீளம், அகலம், ஆழம் முதலியவற்றையும் நீர் அறிய வேண்டுமென பெரிதும் விரும்பு கிறேன். எப்போதும் மனித இனத்துக்காக நான் கொண்டிருக்கும் அளவற்ற ஆவல்களை நீர் உணர்ந்துகொள்ள வேண்டுமென ஆசிக்கிறேன்.

மனிதர்களால் நான் அறிந்து அன்பு செய்யப்படவும், ஒரு சிறப்பான பக்தியால் மகிமைப்படுத்தப்பட விரும்புகிறேன் என்பதை நீர் உணர வேண்டும் என எவ்வளவோ ஆவல் கொள்கிறேன். முதல் மனிதனை உருவாக்கிய நாள் முதல் காலங்கள் தோறும் இந்த ஆவணம் எனக்கு இருந்து வந்திருக்கிறது. இந்த ஆவலை பல காலங்களில் சிறப்பாக பழைய ஏற்பாட்டில் நான் மனிதருக்கு வெளிப்படுத்தியிருக்கிறேன். ஆனால் மனிதர்கள் அதை உணராமல் இருந்துவிட்டனர். இப்போது அந்த ஆவல்தான் என் கடந்த காலத்தை மறக்கச் செய்திருக்கிறது. ஆனால் உலகமெங்கும் வாழும் என் படைப்புகளாகிய உயிர்களிடத்தில் அந்த ஆவல் உண்மையாகிவிட வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

என் படைப்புகளில் மிகவும் எளியவளான , என் மகளோடு உரையாட நான் என்னையே தாழ்த்திக் கொண்டிருக்கிறேன். நான் மனிதரிடையே நிறைவேற்ற விரும்பும் பணியின் சிறப்பை அவள் உணர முடியாவிட்டாலுங்கூட அவள் மூலமாக அனைத்து மக்களிடமும் உரையாட விரும்புகிறேன்.

நான் அவளோடு இறையியல் பற்றிப் பேச முடியாது. அப்படிப் பேசினால் அதில் தோல்வியடைவது உறுதி. அவளால் அதைப்புரிந்து கொள்ள இயலாது. எனவே, எனது திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இவ்வாறு எளிமையுடனும், வெளிப்படையாகவும் செயல்படுகிறேன். இப்போது இப்பணியை ஆராய்ந்து அதை விரைவில் நிறைவேற்றுவது உமது அலுவலாகும்.

என்னை எல்லாரும் அறிந்து, அன்பு செய்து ஒரு சிறப்புப்பக்தியால் மகிமைப்படுத்த பெரும் சாதனைகள் புரிய வேண்டியதில்லை. நான் விரும்புவது இவற்றையே.

1. மனித இனத்தின் தந்தை என்ற தலைப்பிலே என்னை எல்லாரும் மகிமைப்படுத்த ஒரு நாள் அல்லது ஒரு ஞாயிறாவது தனியாக அர்ப்பணிக்கப்பட வேண்டுமென விரும்புகிறேன்.



2. இவ்விழாவுக்கென சிறப்பான ஒரு திருப்பலியும்,திருப்புகழும் அமைக்கப் படவேண்டும். இதற்கென திருவிவிலியத்தில் வாசகங்கள் நிறைந்து கிடக்கின்றன. அவற்றைத் தேடிக் காண்பது கடினமல்ல.

3. நீர் ஒரு தனிச்சிறப்பான பக்தி வழிபாட்டை நிறுவ விரும்பினால், ஆகஸ்டு திங்கள் முதல் ஞாயிறை தேர்ந்துகொள்ளலாம். ஏதாவது ஒரு வார நாளாகத் தேர்ந்தெடுத்தால், அதே திங்களில் ஏழாவது நாளைத் தேர்ந்துகொள்ள வேண்டுமென ஆசிக்கிறேன்.

எல்லா இறைபணியாளர்களும், இப்பக்தி வழிபாட்டைப் பரப்ப முயற்சி எடுக்க வேண்டும். நான் ஒரு கனிவுமிக்க இரக்கம் கொண்ட தந்தை என்பதை எல்லாருக்கும் அறிவுறுத்தி என்னை அன்பு செய்யத் தூண்ட வேண்டும். நான் இருப்பது போலவே என்றும் அவர்களோடு இருப்பேன் என்பதை மனிதருக்கு எடுத்துரைக்க வேண்டும். அவர்கள் என்னை எல்லாக் குடும்பங்களுக்கும் மருத்துவமனைகளுக்கும், ஆய்வகங் களுக்கும், தொழிற்சாலைகளுக்கும், பாசறைகளுக்கும், உலக நாடுகளின் அமைச்சர்களின் கூடங்களுக்கும், அறிமுகப்படுத்த வேண்டும். சுருங்கக் கூறினால் எல்லா மனிதரும் ஒரே ஒரு மனிதன் மாத்திரம் இருந்தால் கூட என் படைப்புக்களான உயிர்களுக்கு என்னை அறிமுகப்படுத்த வேண்டும்.

காணமுடியாத என் திருஉருவை காணக்கூடியவாறு புலப்படுத்த என் திரு உருக்கொண்ட ஒரு படத்தைப் பயன்படுத்தலாம். அதன் மூலம் நான் அங்கு இருக்கிறேன் என்பதை மாந்தர் உணர்ந்து கொள்ளலாம். இவ்வாறு எல்லா மனிதரும் தம் அனைத்து அலுவல்களையும், தம் தந்தையின் பார்வையிலேயே நிறைவேற்றுவர். நானும் அவர்களை என் கண் முன்னே எப்போதும் வைத்திருப்பேன். அதனால் அவர்களைப் படைத்ததோடு அல்லாமல் அவர்களை சுவிகாரம் பண்ணவும் முடியும். இதன் மூலம் என் மக்கள் அனைவரும் தன் தந்தையின் கனிவான பார்வையிலிருக்க முடியும். இப்போதுகூட நான் எங்குமிருக்கத்தான் செய்கிறேன். எனினும் கண்களுக்குப் புலப்படும் வகையில் நான் காட்டப்பட வேண்டும்.

4. ஆண்டிற்கு ஒருமுறை, தங்களது வழக்கமான பணிகளுக்கு ஊறு ஏற்படாத வாறு, இறைப்பணியாளரும், பொது நிலையினரும் சில பக்தி முயற்சிகளைக் கடைபிடிக்க வேண்டும்.

மாந்தர் அனைவரிடையில் எனது தந்தைக்குரிய அன்பின் சுடரை ஏற்றுவதற்கு உலகமெங்கும் இறை பணியாளர் அச்சமின்றி செல்ல வேண்டும். அப்போது புற இனத்தாரிடையே மட்டுமல்ல பிரிந்து சென்ற சபையினர் உங்களில்கூட பிளவை அகற்றி அவர்களை வெற்றி கொள்ள முடியும்.

என் மக்களாகிய இவர்களின் மத்தியில்கூட என் அன்புச் சுடர் பற்றியெறிய வேண்டுமென விரும்புகிறேன். அதனால் அவர்கள் உண்மையை உணர்ந்து அதை ஏற்றுக்கொண்டு, கிறிஸ்தவப் புண்ணியங் களைக் கடைப்பிடிக்க முடியும்.

5. குரு மடங்களிலும், புதுத்துறவியரின் இல்லங்களிலும், பள்ளி களிலும், முதியோர் இல்லங்களிலும் நான் மகிமைப்படுத்தப்பட வேண்டும் என ஆவல் கொள்கிறேன். இளைஞர் முதல் முதியவர் வரை அனைவரும் என்பதைத் தங்கள் தந்தையாகவும், படைப்பாளராகவும், மீட்பராகவும் ஏற்று அன்பு செய்ய வேண்டுமென ஆசிக்கிறேன்.

6. குருக்கள் திருவிவிலியத்தைப் படித்து முக்காலங்களில் மனதை எனக்குச் செலுத்த வேண்டிய வழிபாட்டைப்பற்றிக் கூறியவற்றையெல்லாம் கற்றுத் தெளிவார்களாக, மேலும் இதுவரைத் தெளிவாகத் தெரியாத வற்றையும் படித்துத் தெளிவுபெறுவார்களாக! எனது ஆவல்களையும், எனது திட்டங்களையும், நான் மக்களுக்குப் பொதுவாக கூற விரும்பும் அறிவுரைகளையும் சிறப்பாக குருக்களுக்கும் துறவிகளுக்கும் கூறும் கருத்துக்களையும் எடுத்துக் கூறுவார்களாக. எனக்கு மகிமையளிக்க இவர்களைத் தான் மற்றவர்களைவிட சிறப்பாகத் தேர்ந்தெடுக்கிறேன்.

மனித இனத்திற்காக நான் கொண்டுள்ள ஆவல்களையும், உமக்கு வெளிப்படுத்தியவற்றையும், மக்கள் முழுமையாக உணருவதற்கு சிறிது காலம் தேவைப்படும் ஆனால், எனது அன்பின் பணிக்காக அர்ப்பணிக்கப் படும் தாராள மனங்கொண்டோரின் வேண்டுதல்களும் தியாகச் செயல் களும் நிறைந்த ஒரு நாள்போதும்! அது ஒன்றே என்னை நிறைவு பெறச்செய்யும். என் அன்பு மகனே! உமக்கு எனது ஆசீரை அளிக்கிறேன். எனது மகிமைக்காக நீர் ஆற்றும் பணியின் நிமித்தம் உமக்கு நூறு மடங்காகப் பிரதிபலனளிப்பேன்.

## ஆயர்களுக்கு

என் மகனே அலெக்சாண்டர்! உலகில் என் ஆவல்கள் நிறைவேற வேண்டுமென்பதற்காக, உம்மிடமும் ஒரு சில வார்த்தை கூற விரும்பு கிறேன்.

இந்த எனது பணியைப் பரவச் செய்வதற்காக, என் மகன் இயேசுவின் சிறிய செடியாகிய என் மகனின் ஆன்ம குருவோடு நீர் ஒத்துழைக்க வேண்டும். அப்பணி, நான் மனிதரிடமிருந்து எதிர்பார்க்கும் தனிப்பக்தி முயற்சியைப் பரப்புவதாகும். அதிமுக்கிய இப்பணியை என் மைந்தராகிய உங்களிடம் ஒப்படைக்கிறேன்.

இதைப்பற்றி மக்களுக்கு எடுத்துரைப்பீர், இதை மக்களிடையில் வலியுறுத்துவீர், என் சொற்களை அவர்களுக்கு அறிவுறுத்துவீர், அதனால் என்னை அவர்கள் அறிந்து, அன்பு செய்து மகிமைப்படுத்துவர். இதனால் நான் உம்மிடம் எதிர்பார்ப்பதைச் செய்து எனது விருப்பத்தை நிறை வேற்றுவீர். அப்போது நீண்ட நாட்களாக என்னுள்ளத்தில் அமைதியில் குடிகொண்டிருந்த ஆவல்களை நீர் நிறைவேற்றுவீர்.

நீர் எனது மகிமைக்காக செய்யும் அனைத்திற்காகவும் உமது மீட்பு மற்றும் அர்ச்சிப்புக்காக இரு மடங்கு பிரதி பலனளிப்பேன். இறுதியில், விண்ணகத்தில் மட்டுமே இப்பணியை இறுதிவரை ஆற்றும் அனைவ ரோடும் இணைந்து நீர் பெரும் பயனடைவீர் என்பதை உணர முடியும்.

நான் மனிதரை எனக்குப் படைத்தேன். ஆதலால், நானே அவர் களுக்கு அனைத்துமாயிருப்பது தகுதிவாய்ந்தது. தன் தந்தையும் படைப்பாளருமான என்னாலன்றி வேறு எதிலும் மனிதன் உண்மை மகிழ்வைப் பெற முடியாது. ஏனெனில் அவனது உள்ளம் எனக்காகப் படைக்கப்பட்டிருக்கிறது.

என்னைப் பொறுத்த வரையில், நான் என் படைப்புகளிடத்தில் கொண்டிருக்கும் அன்பு எவ்வளவு உயர்ந்ததென்றால், நான் அவர்களோடு வாழ்வதைத் தவிர வேறு எனக்கு எந்த பெருமகிழ்வுமில்லை.



விண்ணகத்தில் எனது மகிமை எவ்வளவோ உயர்ந்தது! உலகமெங்கும் உள்ள மனிதராகிய என் மக்களிடையில் நான் வாழ்வதாகும். என் படைப்புகளே! உங்களது விண்ணகம், தேர்ந்தெடுக்கப்பட்ட என் மக்களோடு பரகதியிலிருக்கிறது. ஏனெனில் அங்குதான் நீங்கள் என்னை எல்லையற்ற தரிசனத்தில் கண்டு என்னைப்பற்றி ஆழ்ந்து தியானித்து நித்திய மகிமையைப் பெற முடியும். ஆனால் எனது விண்ணகமோ, மனிதராகிய உங்களிடையே உலகிலிருக்கிறது! ஆம் உண்மைதான்! அது உலகில்தானிருக்கிறது. உங்கள் ஆன்மாக்களில் நான் எனது மகிழ்வையும் இன்பத்தையும் தேடிக் கண்டடைகிறேன். நீங்கள் எனக்கு பெரும்மகிழ்வைத் தர முடியும். உங்களுடைய தந்தையும் படைப்பாளருமான எனக்கு, உங்களிடம் ஆவலோடு அதை எதிர்பார்க்கும் எனக்கு, நீங்கள் அதை அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

உங்களோடு தங்கி வாழ்வதில் நான் கொள்ளும் மகிழ்வு, மனித உருவில் இருந்த என் மகன் இயேசுவோடு நான் கொண்ட மகிழ்வைவிட சிறிதளவும் குறைந்ததல்ல. என் பிள்ளைகளே! நான் அவரிடம் கூறியது போல நீங்களும் என் அன்பு மக்கள் தாம். உங்கள் மீதும் நான் பூரிப்படைகிறேன். இதனால், நான் உங்களது உறவிலே மகிழ்ந்து உங்களோடு தங்கியிருக்க விரும்புகிறேன். கதிரவன் மண்ணுலகிலிருப்பது போல நான் உங்களிடையே இருக்கிறேன். என்னை நீங்கள் ஏற்றுக் கொள்ள விருப்பமும் தகுதியும் கொண்டிருந்தால், நான் உங்களுக்கு மிக அண்மையிலிருப்பேன், உங்கள் உள்ளத்தில் குடியிருப்பேன். உங்களை ஒளி பெறச் செய்து உங்களுக்கு எல்லையற்ற அன்பால் இதயம் அளிப்பேன்.

பாவத்தின் பிடியிலிருக்கும் ஆன்மாக்களே! மறை அறிவற்று அறியாமையிலிருப்பவர்களே! உங்கள் உள்ளத்தில் நான் வீற்றிருக்க முடியாது. எனினும் உங்களுக்கு அருகிலிருக்கிறேன். ஏனெனில் உங்களுக்கு எப்போதும் அழைப்பு விடுத்து, என் கொடைகளைப் பெறுவதற்கு நீங்கள் ஆவல்கொள்ளுமாறு உங்களை வரவேற்றுக் கொண்டிருக்கிறேன். அதனால், நீங்கள் ஒளிபெற்று, பாவத்திலிருந்து விடுதலை அடைவீர்கள்.

சிலவேளைகளில் உங்களை கண்டு உங்களது பரிதாப நிலைக்காக மிகவும் இரக்கம் கொள்கிறேன். சில நேரங்களில் அன்போடு உங்களை நோக்குகிறேன். அருளால் நீங்கள் ஈர்க்கப்படுவதற்கு உங்களை அர்ப்பணிக்க வேண்டுமென் பதற்காக சில ஆன்மாக்களோடு நெருங்கி உறவாடுவதற்காக பல நாட்கள் ஏன் பல ஆண்டுகள்கூட செலவிடுகிறேன். இதன் மூலம் அவர்கள் நித்திய பேரின்பம் அடையலாம். நான் அவர்களுக்காகக் காத்திருந்து, அவர்களை ஒவ்வொரு நிமிடமும் அழைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை அவர்கள் உணருவதில்லை. எனினும் இதற்காக நான் சோர்வடைவதில்லை. அவர்களுக்கருகில் இருப்பதில் பெருமகிழ்வு அடைகிறேன். நீங்கள் உங்கள் தந்தையிடம் என்றாவது ஒருநாள் திரும்பி வருவீர்கள் என்றும், நீங்கள் இறப்பதற்கு முன் ஒருசில அன்பு முயற்சிகளாவது செய்வீர்கள் என்றும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

சாவின் பிடியிலிருக்கும் ஓர் ஆன்மாவின் உதாரணத்தை இப்போது எடுத்துக் கூற விரும்புகிறேன். அந்த ஆன்மா எனக்கு ஊதாரி மைந்தனைப் போன்றே இருந்து வந்திருக்கிறது.

அவனுக்கு எண்ணற்ற நன்மைகளை வாரி வழங்கியிருக்கிறேன். ஆனால், அவனுடைய அன்புத் தந்தையின் கொடைகள் அனைத்தையும், அவன் விழலுக்கிறைத்த நீராக்கி விட்டான். இதைவிட மேலாக அவன் என்னை மிகவும் வருத்தத்திற்கு உள்ளாக்கிவிட்டான். நானே அவனுக்காகக் காத்திருந்தேன். அவன் சென்ற இடமெல்லாம் அவனைத் தொடர்ந்தேன். இன்னும் அதிகமான நன்மைகளை அவனுக்களித்தேன். நல்ல உடல் நலத்தைக் கொடுத்தேன். நல்லதொரு அலுவலைக் கொடுத்து, பொருட்செல்வத்தைத்தந்தேன். அவனை செல்வத்தில் மிதக்க வைத்தேன். சில நேரங்களில் எனது பராமரிப்பு மேலும் பல கொடைகளை அவனுக்கு வாரி வழங்கியது. அதனால் பெரும் செல்வத்துள் திளைத்து வந்தான். ஆனால், அவை அனைத்தும் தீய வழியில் பயன்படுத்தப் பட்டன. அடிக்கடி சாவான பாவத்தில் வீழ்ந்ததனால் அறியாமையில் உழன்று கொண்டிருந்தான். இருந்தபோதிலும் எனது அன்பு மனம் சோர்ந்து விடவில்லை. அவனைச் சென்றவிடமெல்லாம் பின் தொடர்ந்தேன். அவனுடைய ஆணவத்தை அறிந்திருந்தும் எல்லாருக்கும் மேலாக அவனை அன்பு செய்தேன். பொறுமையாக அவனுக்கருகிலே இருப்பதில் நான் மகிழ்வடைந்தேன். எனது அன்பை மதித்து, அவனுடைய தந்தையும், மீட்பருமான என்னிடம் நம்பிக்கையிலிருந்தேன். என்றாவது ஒரு நாள் அவன் திரும்பி வருவான் என்ற நம்பிக்கை யோடிருந்தேன்.

இறுதியாக அவனுக்கு முடிவு காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. அவன் தன்னை உணர்ந்து தன் தந்தையாக என்னிடம் திரும்பி வரவேண்டுமென்பதற்காக அவனுக்கு உடல் நோயை அனுப்பினேன். காலம் கடந்துகொண்டிருந்தது. பாவம் என் மகன்! 74 வயதை நெருங்கிக் கொண்டிருந்த போது அவனது கடைசி நேரம் வந்தது. நான் எப்போதும் போலவே அவனோடு இருந்தேன். வழக்கத்துக்கு மாறாக அவனோடு மேலும் கனிவோடு உரையாடிக் கொண்டிருந்தேன். மேலும் முயன்று கொண்டிருந்தேன். நான் அவனுக்கு அளிக்கும் மன்னிப்பை அவன் பெறும்படியாக நான் தேர்ந்து கொண்ட பலரை அவனுக்காகச் செபிக்கக் கேட்டுக் கொண்டேன். இறுதி மூச்சு விடும் தருணத்தில், தன் கண்களைத் திறந்தான். தன் தவறுகளை உணர்ந்தான், என்னை நோக்கி வழி நடத்தும் உண்மையான பாதையை விட்டு விலகிச் சென்ற தன் அறிவின்மையை ஏற்றுக் கொண்டான். சுய நினைவுக்கு வந்ததும், அருகிலிருந்தவர்களுக்கு மட்டும் கேட்கக்கூடிய குரலில் பேசத் தொடங்கினான், என் கடவுளே! எனக்காக நீர் கொண்டிருந்த பேரன்பு எவ்வளவோ உயர்ந்தது என்பதை இப்போது உணருகிறேன். எனது தீமைகள் நிறைந்த வாழ்வால் உம்மை இடைவிடாமல் மனம் நோகச் செய்திருக்கிறேன். என் தந்தையும், மீட்பருமாகிய உம்மை ஒருபோதும் எண்ணிப் பார்க்கவில்லை. எனக்கு எல்லாம் வெட்ட வெளிச்சமாயிருக்கிறது. என்னுள்ளத்திலிருக்கும் எல்லாப் பாவங்களுக்காகவும், நான் உம்மிடம் மன்னிப்புக் கோருகிறேன். அவற்றை உணர்ந்து அறிக்கையிடுகிறேன். என் தந்தையும் மீட்பருமாகிய உம்மை அன்பு செய்கிறேன்.



இதைக் கூறி முடிந்ததும், அவன் உயிர் துறந்துவிட்டான். இப்போது இங்கே என் முன்னிலையிலிருக்கிறான். தந்தைக்குரிய அன்போடு அவனுக்கு நீதி வழங்குகிறேன். என்னை அவன் தந்தை என்று அழைத்ததால், அவன் மீட்கப்பட்டான். தனது பாவங்களுக்குப் பரிகாரம் புரியும் இடத்தில் அவன் சிறிது காலமிருக்க வேண்டும். அதன்பின் முடிவில்லா காலத்துக்கும், அவன் பேரின்பம் அனுபவிப்பான். மனம் மாறியபோது, தான் மீட்படைய முடியுமென்று அவன் மகிழ்ந்திருந்தான். அவனுக்கு என்றும் நான் தந்தையாகயிருக்க விரும்பும் எனது ஆவலை அவன் உணர்ந்து கொண்டதால், நான் எனது வானக மன்றத்தோடு இப்போது பெரு மகிழ்வடைகிறேன்.

நீதி நெறியிலும், அருள் வாழ்விலும் இருக்கும் ஆன்மாக்களுக்கு நான் அவர்கள் உள்ளத்தில் வீற்றிருந்து எனது மகிழ்வைப் பொழிகிறேன். மேலும் என்னையே அவர்களுக்குத் தருகிறேன். எனது ஆற்றலை அவர்களுக்கு அளிக்கிறேன். அதனால் தம் தந்தையும் மீட்பருமான என்னிடம் விண்ணக இன்பத்தின் முன் சுவையை எனது அன்பினால் அவர்கள் உணரமுடிகிறது.

## விண்ணகத் தந்தையின் அன்பு மொழிகள்

### பாகம் இரண்டு

1932ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 12–ஆம் நாள் அன்று இந்த இரண்டாம் பாகம் தொடங்கியது. ஒருநாள் அலகை அதை எடுத்து அது அடங்கிய மேலுறையை கிழித்துவிட்டது.

“வாழ்வளிக்கும் நீரூற்று ஒன்றை இப்போது தான் திறந்திருக்கிறேன். அது இன்றைக்கும், என்றென்றைக்கும் வற்றாத நீரூற்று, என் படைப்புகளாகிய உங்களிடம் நான் வருகிறேன். உங்களுக்காக அன்பினால் பொங்கி வழியும், என் இதயத்தைத் திறந்திருக்கிறேன். திறந்து விடுவதற்காக, எனது எல்லையற்ற இரக்கத்துக்கு நீங்கள் சான்று பகர வேண்டுமென ஆசிக்கிறேன். உங்களுக்கு எனது அன்பை வெளிப்படுத்துவது மட்டும் போதாது. எனது இதயத்தை உங்களுக்காகத் திறந்து விட விரும்புகிறேன். அதிலிருந்து புத்துயிர் அளிக்கும் நீரூற்று பொங்கி எழுகிறது. அங்குதான் மாந்தர் அனைவரும் தம் தாகம் தணித்துக் கொள்கின்றனர். அதனால், பரிவிரக்கமுள்ள தம் தந்தையின்பால் கொண்ட மிகைப்படுத்தப்பட்ட அச்சத்தினால் வருந்தினாலும், இதுவரைக் கண்டிராத மகிழ்ச்சியை மாந்தர் உணர முடியும்.

மனிதருக்கு ஒரு மீட்பரை வாக்களித்த நாள் முதல் நான் இவ்வூற்றை பொங்கி வழியச் செய்து வந்திருக்கிறேன். அது என் மகனது இதயத்தின் வழியாக உங்களை வந்தடையச் செய்தேன். ஆனால், அதைவிட, உங்களுக்காக நான் கொண்ட அளவற்ற அன்பு என்னை இதைவிட மேலும் ஒன்றை செய்யத் தூண்டியது. என் மக்களாகிய உங்கள் மீது மீட்பின் நீரூற்று பொங்கி வழிவதற்காக என் இதயத்தைத் திறந்து வைத்திருக்கிறேன். அந்நீரூற்றிலிருந்து தமக்குத் தேவையானவற்றை மனிதர் இன்றும் என்றென்றும் முகந்து கொள்ளலாம்.

நான் பேசிக் கொண்டிருக்கும் நீரூற்றைப் பற்றி ஆராய எண்ணுகிறீர்களா? முதலில் நீங்கள் என்னை மேலும் அறிந்து, நான் விரும்பும்

அளவுக்கு என்னை அன்பு செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். அதாவது ஒரு தந்தையைப் போல மட்டுமல்ல, ஒரு நண்பரை போல ஒரு நம்பிக்கைக்குரியவரைப்போல என்னை நீங்கள் அன்பு செய்யவேண்டும்.

இதைக்கேட்டு வியப்படைகிறீர்களா? நான் உங்களை எனது உருவிலே உருவாக்கவில்லையா? உங்கள் தந்தையும், படைப்பாளரும், கடவுளுமான என்னோடு நெருங்கி உறவாடுகின்றபோது வியப்படையக் கூடாது என்பதற்காகவே இப்படி உங்களை உருவாக்கினேன். என்னுடைய கனிவுமிக்க இரக்கத்தால், தந்தையாகிய எனக்குரிய இறையன்பின் மக்களாக நீங்கள் மாறியிருக்கிறீர்கள்.

என் மகன் இயேசு என்னிலிருக்கிறார். நான் அவரிலிருக்கிறேன். தூய ஆவியாகயிருக்கும், எங்களது பரஸ்பர அன்பால் நாங்கள் இணைந் திருக்கிறோம். அத்தூய ஆவியே எங்களை இணைக்கச் செய்து ஒருவராக இருக்கச் செய்கிறார். என் மகனே இந்த நீரூற்றின் சுனையாவார். அதனால், மீட்பின் நீரூற்று எப்போதும் பொங்கி வழிகிறது. அவரது இதயத்தை அனைவரும் அணுகிச்சென்று அதிலிருந்து முகந்துகொள்ள முடிகிறது. ஆனால், என் மகன் உங்களுக்காக திறந்திருக்கும் , அந்நீரூற்று இருப்பதாக நீங்கள் உணர வேண்டும். அதனால் அந்நீரூற்றில் இனிமை யான புத்துயிர் அளிக்கும் நீர் சுரக்கிறது என நீங்கள் உணர்ந்துகொள்ள முடியும். எனவே என் மகன் மூலம் என்னிடம் வாருங்கள். என் அண்டையில் இருக்கும்போது உங்களுடைய ஆவல்கலை என்னிடம் நம்பிக்கையுடன் அர்ப்பணியுங்கள். நானிருப்பது போலவே என்னை உங்களுக்கு வெளிப்படுத்தி, அந்நீருற்றை உங்களுக்குப் புலப்படுத்து வேன். என்னை நீங்கள் உணர்ந்தபின் உங்களது தாகம் தணிக்கப்படும், அதனால் புத்துயிர் பெறுவீர்கள், நோய்களிலிருந்து நலம் பெறுவீர்கள், உங்களுடைய அச்சங்கள் மறைந் தொழியும். உங்களது மகிழ்ச்சி நிறைந்து வழியும். உங்களது அன்பு முன்பு இல்லாததைவிட பன்மடங்கு சேமமாயிருக்கும்.

**எப்படி என்னிடம் வருவது என்று கேட்கிறீர்களா? நம்பிக்கையின் பாதையில் நடந்து வாருங்கள் உங்கள் தந்தையாகிய என்னைக் கூவி அழையுங்கள். என்னை ஆவியிலும் உண்மையிலும் அன்பு செய்யுங்கள், புத்துயிர் அளிக்கும் ஆற்றல் வாய்ந்த அந்நீரால் உங்களது தாகம் தணிக்கப்படும் என்பதற்கு இதுவே போதுமானது.**

என்னை அறிவதற்கும், அன்பு செய்வதற்கும் தேவையான அனைத்தையும் உங்களுக்கு இந்நீர் தரவேண்டுமென்றால், மேலும் நீங்கள் ஆர்வமின்றி பற்றற்றிருந்தால், என்னைத் தந்தை என்ற இனிய திருப் பெயரால் கூவி அழையுங்கள். நான் உடனே உங்களிடம் வருவேன். எனது நீரூற்று உங்களுக்கு, அன்பையும், நம்பிக்கையையும், உங்களைப் படைத்த தந்தையால், நீங்கள் அன்பு செய்யப்படுவதற்குத் தேவையான அனைத்தையும் அளிக்கும்.

நீங்கள் அனைவரும் என்னை அறிய வேண்டுமென நான் விரும்புகிறேன். அதனால் இவ்வுலகிலேயே என்னுடைய பரிவிரக்கத்தை நீங்கள் துய்த்துணர முடியும். எனவே, என்னை அறியாதவர்களுக்கு நீங்கள் என்னைப்பற்றி அறிவிக்கும் திருத்தொண்டர்களாக மாறுங்கள். உங்க ளுடைய உழைப்புகள் மீதும், முயற்சிகளின் மீதும் என் ஆசீரைப் பொழிவேன். நீங்கள் என்னோடு என்றென்றும் வாழும் மகிமையை உங்களுக்காகத்



தயாரிப்பேன்.

என் மக்களே! நான் ஓர் அன்புக் கடல். வயது, வாழ்வு நிலை, இனம், இவை போன்ற வேறுபாடுகள் எதையும் கருதாது அனைவர் மீது நான் கொள்ளும் தந்தைக்குரிய அன்புக்கு மற்றும் ஒரு சான்று இது. எந்த ஒரு மாறுபட்ட சமுதாயத்தையோ, மத இயக்கத்தையோ நாத்திகரையோ , ஆத்திகரையோ நான் ஒதுக்கி வைப்பதில்லை. பகுத்தறிவு கொண்டுள்ள மாந்தர் அனைவரையும் எனது, இந்த அன்பினால் அரவணைத்துக் கொள்கிறேன்.

நான் ஓர் அன்புக்கடல் என்பதற்கு இதோ சான்று! உங்களது தாகந்தீர்க்க, இதயத்திலிருந்து பொங்கிவரும் நீரூற்றை உங்களுக்குக் காண்பித்தேன். அதன் மூலம் நீங்கள் நான் அனைவருக்காகவும் கொண்டுள்ள இரக்கத்தை உணர முடிகிறது. இப்போது உலகமெங்கும் பரவியிருக்கும் எனது விரிந்த பரந்த அன்புக்கடலை உங்களுக்கு காண்பிக்கிறேன். அதனால் நீங்கள் அதில் தயக்கமின்றி மூழ்கிக் களிக்கலாம். எதற்காக இப்படிச் செய்ய வேண்டும்? இக்கடலிலே ஆன்மாக்கள் மூழ்குவதால், தங்களுடைய குற்றங்குறைகளின் மற்றும் பாவக்கறையின் கொடுமையை நீக்கித் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ள முடியும். இக்கடலிலிருந்து நீங்கள் நல்லவர்களாக வெளியேறி அதிலிருந்து அன்பையும், இரக்கத்தையும் கற்றுக் கொண்டு மகிழ்வுறலாம். உங்களுடைய அறியாமையாலும், வலுவின்மையாலும் இக்கொடுமை யில் மீண்டும் தவறிவிழுகிறீர்கள். எனினும் நான் உங்களுக்கு அன்புக் கடலாயிருந்து, இரக்கப் பெருக்காயிருந்து நான் தூய்மையாயிருப்பது போல உங்களையும் தூய்மையாக்குவேன்.

**என் மக்களே! நீங்கள் இவ்வுலகில் மகிழ்வோடும், அமைதியோடும் வாழ விரும்புகிறீர்களா? வாருங்கள்! வந்து, இந்த மாபெரிய அன்புக்கடலில் மூழ்கிக் களியுங்கள். அதிலே காலமெல்லாம் நிலைத்திருங்கள். வழக்கமான வாழ்வை நீங்கள் வாழ்ந்தபோதிலும், உழைத்தபோதிலும், உங்களது வாழ்வு அன்பினால் அர்ச்சிக்கப் பெறும்.**

உண்மை நெறியில் நடவாத என் மக்களையும் எனது தந்தைக்குரிய முன் குறித்து வைத்திருக்கும் அரவணைப்பில் இணைத்துக் கொள்கிறேன். அதனால் தம் கண்களைத் திறந்து என்றுமில்லாச் சுடருடன் மிளிரும் ஒளியை அவர்கள் காண முடியும்.

**ஆதிமுதல் அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருந்த அருளின் காலம் இது! உங்களோடு நேருக்கு நேர் உரையாடுவதற்காக நான் இங்கிருக்கிறேன். கனிவும் அன்பு மிக்க தந்தையர் அனைவருக்கும் மேலான தந்தையாக நான் உங்களிடம் வருகிறேன். என்னை மறந்து நான் என்னைத் தாழ்த்திக் கொள்கிறேன். உங்களையெல்லாம், உயர்த்திவிட்டு உங்களுக்கு மீட்பளிக்க வேண்டும் என்பதற்காக! இப்போது வாழும் நீங்கள் அனைவரும், இன்றும் பிறவாமல், உலகிலே காலந்தோறும் வாழப் போகும் மக்கள் அனைவரும், தாம் யாரும் தனிமையிலிருப்பதில்லை என்பதை உணர வேண்டும். உங்களை ஒரு தந்தை எப்போதும் நினைவில் கொண்டு, அவரது அளவற்ற ஆழ்ந்த அன்பில் உங்களுக்கு பங்களிக்கிறார் என்பதையும் உணர வேண்டும், எனது தந்தைக்குரிய இதயத்தி லிருந்து பொங்கி வழியும் நீரூற்றை அணுகி வாருங்கள்.**

நலம் தரும் அந்நீரின் இனிமையைச் சுவைத்துப் பாருங்கள். உங்கள் உள்ளங்களில் அந்நீரின் இனிமையான ஆற்றலை உணர்ந்து, உங்கள் தேவை களை நிறைவு செய்தபின், எனது அன்புக்கடலில் மூழ்கி விடுங்கள். அதனால்

என்னில் மட்டுமே நீங்கள் வாழ்வீர்கள், உங்களுக்காக இறந்து, என்னோடு என்றென்றைக்கும் வாழ்வீர்கள்.

நான் உங்கள் நடுவிலிருக்கிறேன். இந்த உண்மையை ஏற்றுக் கொள்பவர்கள் பேறுபெற்றவர்கள். "கடவுள் தாம் விரும்புவது போல மாந்தரால் அன்பு செய்து மகிமைப்படுத்தப்படும் காலம் வரும்" என்று விவிலியம் கூறும் இக்காலத்தைப் பயன்படுத்துபவர்களும் பேறு பெற்றவர்களே!

இதற்கு ஏன் என்ற வினாவை எழுப்பிப் பதிலும் கூறுகிறது விவிலியம், "ஏனெனில், கடவுள் ஒருவருக்கே மகிமையும், பெருமையும் அன்பும் உரியன." மோசேக்கு நான் அளித்த பத்துக் கட்டளைகளில் முதல் கட்டளை "கடவுளை அன்பு செய்து வணங்குவாயாக" இக்கட்டளை மக்களுக்கெல்லாம் தரப்பட்டது.

ஏற்கெனவே, கிறித்தவர்களாக இருப்பவர்கள் கூறுவது இதுவே "எங்களது பிறப்பு முதல் அல்லது எங்களது மனந்திரும்புதல் முதல் நாங்கள் உம்மை அன்பு செய்துகொண்டு தானிருக்கிறோம். இதையே கர்த்தர் கற்பித்த செபத்தில் "விண்ணகத்திலிருக்கும் எம் தந்தாய்!" எனக் கூறி வருகிறோம். உண்மைதான் மக்களே! நீங்கள் கூறுவது சரியே! கர்த்தர் கற்பித்த செபத்தின் முதற்பகுதியில் நீங்கள் கூறுவது போல என்னை நீங்கள் அன்பு செய்து மகிமைப்படுத்துகிறீர்கள். ஆனால் தொடர்ந்து இரண்டாவது மன்றாட்டையும் நீங்கள் கூற வேண்டுமென விரும்புகிறேன்.

"உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக!"

ஆனால் என்னுடைய நாமம் அர்ச்சிக்கப்படுகிறதா? தொடர்ந்து சொல்லுங்கள்,

"உம்முடைய இராச்சியம் வருக!" ஆனால் எனது அரசு வந்து விட்டதா? என் மகன் இயேசுவின் அரசாட்சியை நீங்கள் பக்தியுடன் கொண்டாடுகிறீர்கள். அவரில் என்னை நீங்கள் மகிமைப்படுத்துகிறீர்கள். ஆனால், அரசர் என்ற மகிமையை உங்கள் தந்தைக்கு தர மறுப்பீர்களா? அல்லது எல்லா மனிதரும் என்னை அறிந்து அன்பு செய்யும் வரை எனது அரசு நிலவுவதை மறுப்பீர்களா? என் மகனது அரச மாட்சியின் திருவிழாவை நீங்கள் கொண்டாட வேண்டுமென விரும்புகிறேன். அது பிலாத்துவின் முன் அவர் பெற்ற ஏளனங்களுக்காகவும், உரோமை வீரர்கள் அவரது மாசற்ற திருமேனிக்கு கொடுத்த அடிகளுக்காகவும் பரிகாரமாக இவ்விழா கொண்டாடப்பட வேண்டும். இந்த விழா நிறுத்தப்பட வேண்டுமென நான் கேட்கவில்லை.

மாறாக அது மேலும் ஆர்வத்துடனும், பக்தியுடனும் கொண்டாடப்பட வேண்டும். ஆனால், இந்த அரசரை அனைவரும் உண்மையாக அறிய, அவரது அரசையும் அறிந்து கொள்ள வேண்டும். இவ்விரு அறிவுகளையும் முழுமையாக உணர அந்த அரசரின் தந்தையும், அவரது அரசை நிறுவியவரையும் அறிந்து கொள்ள வேண்டுமல்லவா?

என் மக்களே! நான் என மகனை நிறுவும்படிபணித்த திருச்சபை, தன்னை உருவாக்கியவராகிய உங்களுடைய தந்தையும், படைப்பாளருமாகிய என்னை மகிமைப்படுத்துவதில், தனது முழு பணியையும் நிறைவேற்றுகிறது. என் மக்களே! உங்களில் சிலர் இப்படிக்கூறலாம். திருச்சபை தொடர்ந்து வளர்ந்துகொண்டேயிருக்கிறது. கிறித்தவர்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டேயிருக்கின்றனர்.இதுவே திருச்சபை முழுமைபெற்றுள்ளது



என்பதற்குச் சான்றாகுமே! என் மக்களே! திருச்சபையின் துவக்க காலத்திலிருந்தே அதை நான் பாதுகாத்து வருகிறேன். என்னுடைய மகனோடும் தூய ஆவியோடும் இணைந்து, என் பதிலாளரான பாப்பிறை மூலம் திருச்சபை தவறாத வரத்துடன் செயல்பட வேண்டுமென நான் விரும்புகிறேன். இதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால், கிறிஸ்தவர்கள் நான் இருப்பதுபோல என்னை, கனிவும் இரக்கமும், நன்மையும் தாராளம் கொண்ட தந்தை என்று அறிந்ததால், திருமறையை அதிகப்பற்றுடனும், நேர்மையுடனும் அவர்கள் பின்பற்றுவார்கள் என்பது உண்மையாகுமல்லவா?

என் மக்களே! உங்களை நினைத்து உங்கள் மீது அளவற்ற அன்பு செலுத்த ஒரு தந்தையிருக்கிறார் என்று நீங்கள் உணர்ந்தால், உங்களுடைய கிறிஸ்தவக் கடமைகளையும், நாட்டுக் குடிமக்களுக்குரிய கடமைகளையும் மிக அக்கறையுடன் நிறைவேற்றுவீர்கள். மேலும் கடவுளுக்கும், மனிதருக்கும் உரிய நீதியை நீங்கள் நேர்மையுடன் வழங்குவீர்கள். இதில் ஐயம் ஏதுமில்லை.

உங்களை வேற்றுமை பாராது மக்கள் என்னும் இனிய பெயரால் அழைத்து அன்பு செய்யும் இத்தந்தையை நீங்கள் அறிந்தால், நீங்கள் என்னை பாசமுள்ள குழந்தைகளைப்போல் அன்பு செய்வீர்கள். அந்த அன்பு, எனது உறுதுணையுடன் பணிபுரியும் அன்பாக மாறும். மேலும் கிறித்தவ சமூகத்தை இன்னும் அறியாத வர்களிடமும், தம்மைப் படைத்த தந்தையாக கடவுளை அறியாதவர்களிடமும் இந்த அன்பு பரவ முடியும் . இதிலும் எந்த ஐயமும் இல்லை.

தமது மூட நம்பிக்கையில் மூழ்கியவரிடமும், அல்லது தமக்கு அருகில் நான் இருப்பதை உணராது, எனது இருப்பை மாத்திரமே உணர்ந்து என்னைத் தந்தை என்றழைப்பவரிடமும் யாராவது சென்று உரையாடினால், தம்மைப் படைத்தவர் தமக்கு ஒரு நல்ல தந்தையுமாவார் என்று எடுத்துரைத்தால், இறுகிய மனம் படைத்தவர்கூட மனமாற்றம் பெறுவர். மேலும் அவர்களிடம் அத்தந்தை தம்மைப்பற்றி நினைத்து தமக்காக அக்கறையுடன் இருக்கிறார், தம் துன்பங்களிலும் ஏமாற்றங்களிலும், அவர் தம்மைப் பாதுகாக்கிறார் எனக் கூறினால், மக்களிடம் அதிக மனமாற்றம் ஏற்படும். இம்மனமாற்றம் உறுதியாக நிலைத்திருக்கும்.

மனிதரிடையே நான் பரப்பும் இப்பணியை ஆராய்ந்து, விமர்சிக்கும் ஒரு சிலர் எண்ணலாம். மறைபோதக நாடுகளுக்குச் சென்று போதித்த பணியாளர்கள் விசுவாசியாதவர்களுக்கு கடவுளைப்பற்றியும் அவரது இரக்கத்தைப்பற்றியும், மகிமையைப்பற்றியும் எடுத்துச் சொல்லியிருப் பார்களே! கடவுளைப்பற்றியே எப்போதும் பேசிக் கொண்டிருப்பதால், மேலும் அவரைப்பற்றி சொல்வதற்கு என்ன இருக்கிறது? எனக் கேட்கலாம்.

மறைப்பணியாளர்கள் என்னைப்பற்றி போதித்திருக்கின்றனர். என்னை அவர்கள் அறிந்தவரை அடுத்தவருக்கு என்னைப்பற்றித் தொடர்ந்து எடுத்துச் சொல்கின்றனர். அது உண்மைதான். ஆனால், நான் இருப்பது போல் இன்னும் நீங்கள் என்னை உணரவில்லை. ஏனெனில் நான் எல்லாருக்கும் கனிவுள்ள தந்தை என்பதையும், தந்தையர்க்கெல்லாம் தந்தை என்பதையும், அச்சத்தினால் சிதைந்து போன உங்களது அன்பைச் சீர்திருத்த வருகிறேன் என்பதையும் நீங்கள் உணரவில்லை.

என் படைப்புகளைப் போல் என்னை மாற்றி, அச்சமும் நீதியும் உள்ள கடவுள் நான் என நீங்கள் கொண்டிருக்கும் அச்சத்தை அகற்ற நான்

வருகிறேன். ஏனெனில், உங்களது உலக வாழ்க்கையை மிக எளிதாக்கி, அதன்பின் விண்ணகத்தில் இறை வாழ்வை உங்களுக்குத் தர விரும்பும் தந்தையிடம் பலர் [வாழ்நாள் முழுவதும்] நம்பிக்கை கொள்வதில்லை என நான் அறிவேன்.

நீங்கள் என்னை உணராதிருப்பது போலவே பல மனிதர்கள் என்னை முழுமையாக உணருவதில்லை என்பதற்கு இது ஒரு சான்றாகும். என்னைப்பற்றி நீங்கள் கொண்டிருக்கும் கருத்தையே அவர்களும் கொண்டிருக்கின்றனர். ஆனால் இப்போது உங்களுக்கு இந்த அறிவொளியை ஊட்டுகிறேன் அதில் நிலைத்திருந்து, அதை அனைவருக்கும், நீங்கள் வழங்கினால், மாந்தரின் மன திரும்புதலுக்கும், முடிந்தால் நரகத்தின் வாயில்களை மூடுவதற்கும் அது ஓர் ஆற்றல் மிக்க வழிமுறையாகும். ஏனெனில், நான் என்றும் நிலைக்கும் எனது வாக்குறுதியை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

என்னைத் தந்தை என்ற பெயரால் அழைப்பவர் அனைவரும், அவ்வாறு அவர்கள் ஒருமுறையே அழைத்திருந்தாலுங்கூட, அவர்கள் அழிவுறுவதில்லை. ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்டவரோடு, அவர்கள் முடிவற்ற வாழ்வை உறுதியாக பெறுவர்.

என்னை மற்றவருக்கு அறிவித்து அன்பு செய்யவும், மகிமைப் படுத்தவும் தூண்டும் பணியில் ஈடுபடுபவராகிய நீங்கள் அதிகக் கைமாறு பெறுவது உறுதி. ஏனெனில் எதையும் கணக்கிட்டு, அது சிறிய முயற்சியாக இருந்தாலும், உங்களுக்கு மறுமையில் நூறு மடங்காகப் பிரதிபலனளிப்பேன்.

மனித சமூகத்தைப் படைத்தவரான என்னைச் சிறப்பான முறையில் மகிமைப்படும் பக்தி வழிபாட்டை திருச்சபையில் முழுமை பெறச் செய்ய வேண்டும் என நான் முன்பே கூறியிருக்கிறேன். மனித சமதாயத்தை உருவாக்கவே நான் வந்தேன். நானே அதன் உயிராவேன் . தந்தை மகன் தூய ஆவி என்ற மூன்று ஆட்களாகிய கடவுள் நானே!

இம்மூன்று ஆட்களும் திருச்சபையிலும், மனித இனம் முழுவதிலும் சிறப்பான பக்தி வழிபாட்டால் மகிமைப்படுத்தப்படும் வரையில் சமுதாயத்தில், ஏதோ ஒரு குறை இருந்து கொண்டுதானிருக்கும். இக்குறையைப்பற்றி சிலரிடம் நான் எடுத்துக்கூறியிருக்கிறேன். ஆனால் அச்சத்தினால் அவர்கள் அதற்குச் செவிமடுக்கவில்லை. ஒரு சிலர் அதைப்பற்றி தகுந்தவர்களிடம் எடுத்து கூறியிருக்கின்றனர். ஆனால் தோல்வி அடைந்தபோது அவர்கள் நிலைத் திருக்கவில்லை.

இப்போது எனது நேரம் வந்துவிட்டது. இதுவரை தாம் முழுமையாக உணராதவற்றை எடுத்துரைப்பதற்காக நான் என் மக்களிடம் வருகிறேன். அன்பு நெறியின் கனலை அளிப்பதற்காக நான் வருகிறேன். அதனால் மனித இனத்தைச்சூழ்ந்திருக்கும் பனிப்பாறைகள் உருகிக் கரைக்கப்படும். என் அன்பு கெழுமிய மனித இனமே, என் மக்களே, இன்று வரை உங்களை இறுக்கிப் பிணைத்து தூய்மையான அன்பு கொண்ட தந்தையின் பால் அச்சம் கொள்ளத் தூண்டி வரும் சாத்தானின் வலைகளை அறுத்தழிப்பீர். வாருங்கள்! என் அண்டையில் வந்து சேருங்கள்! உங்கள் தந்தையாகிய என்னிடம் வர உங்களுக்கு எ ல்லா உரிமையும் உண்டு. உங்கள் உள்ளங்களைத் திறந்து என் மகனிடம் வேண்டுங்கள். உங்கள் மீது நான் கொண்டுள்ள இரக்கத்தை நீங்கள் மேலும் கண்டுணர அவர் உங்களுக்கு உதவுமாறு மன்றாடுங்கள்.



மூட நம்பிக்கையின் பிடியிலிருப்பவர்களே! அலகையின் கட்டளைக்குப் பணிபவர்களே! இந்த அடிமைத்தளையை அறுத்தெறிந்து உண்மைக்கெல்லாம் உண்மையிடம் வந்து சேருங்கள். உங்களைப் படைத்தவரான தந்தையைக் கண்டுணருங்கள். இதுவரை பயனற்ற முறையில் வாழ்க்கை நடத்த உங்களை தூண்டியவர்களுக்கு வணக்கமும், மரியாதையும் செலுத்தும் உரிமை உங்களுக்கு இருக்கக்கூடாது. ஆனால், என்னிடம் வாருங்கள். உங்கள் அனைவருக்காகவும் நான் காத்துக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால் நீங்கள் அனைவரும் என்னுடைய மக்கள்.

உண்மையில் வாழ்ந்து கொண்டிருப்பவராகிய நீங்கள், உண்மையை உணராதவர்களிடம் உண்மையில் வாழ்வது எவ்வளவோ இனிமையானது என எடுத்துரையுங்கள். என் அன்புப்படைப்புகளான, என் மக்களாகிய கிறித்தவர்களிடம் அனைத்தையும் கண்டு, அறிந்து அனைவருக்கும் உதவியளித்து, அனைவரையும் எளிதில் மன்னித்து மெதுவாக தயக்கமுடன் தண்டிக்கும் கருணை உள்ளங்கொண்ட ஒரு தந்தையிருக் கிறார் என்பது எவ்வளவோ இனிமையானது எனக்கூறுங்கள். அவர்களை என்னிடம் வரத் தூண்டுங்கள். நான் அவர்களுக்கு உதவியளித்து அவர்களது சுமைகளை எளிதாக்கி அவர்களது கசப்பான வாழ்வை இனிமையாக்குவேன். இன்றும், என்றும் அவர்களை மகிழ்விக்க எனது தந்தைக்குரிய அன்பில் அவர்களைத் திளைக்கச் செய்வேன்.

விசுவாசத்தை இழந்து இருளில் சிக்கித் தவிக்கும் என் மக்களாகிய நீங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்! உங்களை ஒளிர்விப்பதற்காக வந்து கொண்டிருக்கும் சுடர் ஒளியை நீங்கள் காணலாம். நானே, ஒளி தந்து தனல் கொடுக்கும் கதிரவனாவேன். என்னை உங்களுடைய தந்தையாகவும், படைப் பாளராகவும் ஒரே ஒரு கடவுளாகவும், கருதி ஏற்றுக் கொள்ளுங்கள், உங்களை நான் அன்பு செய்வதற்காகத்தான் உங்களிடம் வருகிறேன். நீங்கள் மீட்படைய வேண்டுமென்பதற்காகவே என்னை நீங்கள் அன்பு செய்ய வேண்டுமென விரும்புகிறேன்.

உலகமெங்குமிருக்கும் எல்லா மனித இனத்தவரோடும், நான் உரையாடிக் கொண்டிருக்கிறேன். என் தந்தைக்குரிய உங்கள் உள்ளங் களில் ஒலிக்க வேண்டுமென்று விண்ணப்பிக்கிறேன். நீங்கள் உணர வேண்டுமென்று நான் விரும்பும் இந்த அன்பு என்றும் நிலைக்கக் கூடிய ஒன்றாகும். அன்பு செய்யுங்கள்! எப்போதும் அன்பு செய்யுங்கள்! தந்தையை மற்றவர்கள் எவ்வாறு அன்பு செய்வதென்று அவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள். அதனால் இன்றிலிருந்து உங்களை மிக உருக்கமுடன் அன்பு செய்யும் தந்தையைப் பற்றிய அனைத்தையும் நான் அறிவுறுத்துவேன்.

குருக்கள் மற்றும் துறவிகளான என் மக்களே! மாந்தர் அனைவருக் காகவும் சிறப்பாக உங்களுக்காகவும், நான் கொண்டிருக்கும் தந்தைக்கு உரிய அன்பை நீங்கள் அறிவிக்க வேண்டுமென விரும்புகிறேன். உங்களிடமும் எல்லா மாந்தரிடமும் எனது திருவுளம் நிறைவேற வேண்டும் என்பதற்காக நீங்கள் உழைக்க வேண்டும். அது, நான் அனைவராலும் அறியப்பட்டு, அன்பு செய்யப்பட்டு மகிமைப்படுத்தப் படுவதாகும். அன்பைப் பல நாட்களுக்குச் சோர்ந்துவிடச் செய்யாதீர்கள். ஏனெனில் நான் அன்பு செய்யப்படுவதற்காக ஏக்கம் கொண்டிருக்கிறேன்.

மற்ற எல்லா நூற்றாண்டுகளைவிட இந்நூற்றாண்டு கொடைகளால் நிறைந்திருக்கிறது. அவைகள் பயனற்றுப் போக விடாதீர்கள். இல்லையென்றால் அவைகள் திரும்ப எடுத்துக் கொள்ளப்படலாம். ஆன்மாக்கள் கடவுளால் தொடரப்பட வேண்டும். காலம் வேறு கடந்து கொண்டிருக்கிறது. எனினும் எதற்கும் அஞ்ச வேண்டாம். உங்களுக்குத் தந்தையாக நானிருக்கிறேன். உங்களுடைய உழைப்பிலும், முயற்சிகளிலும் நான் உங்களுக்கு உறுதுணையாகயிருப்பேன். உங்களைப் பாதுகாத்து, இவ்வுலகிலே மகிழ்ச்சியாலும், அமைதி யாலும் நிரப்புவேன். உங்களுடைய ஆன்மீகப் பணியையும், ஆன்மீகத் தாகத்தையும் பயன்பெறச் செய்வேன். எல்லையற்ற பேறு பலன்களுக்காகக் காத்திருக்கும்போது, இவ்வுலகிலேயே விண்ணகத்தின் முன்சுவையை, மகிழ்ச்சியும், அமைதியும் கொண்ட ஆன்மாக்கள் அனுபவிப்பது பெரும் கொடையல்லவா!

என்னுடைய பதிலாளரான திருத்தந்தையிடம், இயேசுவின் திரு இருதய பக்தியை உலகெங்கும் பரவச் செய்வதற்காக மறை பரப்பும் திருத் தூதர்களைத் தனிப்பட்ட முறையில் தேர்ந்தெடுக்க வேண்டும் என அறிவுறுத்தியிருக்கிறேன். இப்போது, நான் இருப்பதுபோல என்னை அறிவிக்கவும், என் படைப்புகளாகிய மக்களிடம் நான் சொல்வதை எடுத்துரைக்கவும், அதே இயேசு உலகுக்கு வந்தார் என்ற உண்மையைப் பரப்ப திருத்தந்தையிடம் அறிவுறுத்துகிறேன்.

இயேசுவின் திரு இருதயத்தின் ஆழத்தை மனிதர்கள் உணர்ந்தால், அதன் ஆவல்களையும் பெருமையையும், அறிந்ததால் அவரை அனுப்பிய தந்தையை மகிமைப்படுத்துவதே அவரது அதிமுக்கிய ஆவல் என்பதை உணர்ந்து கொள்வர். மேலும், இதுவரை அம்மகிமை குறைந்து கொண்டு வருவதை அவர் விரும்புவதில்லை என்பதையும் மனிதர்கள் தெரிந்து கொள்வர். நம்பி, தம் தந்தையும், படைப்பாளரும் அதைவிட தமது மீட்பின் ஊற்றுமாகிய என்னை மனிதர்கள் முழுமையாக மகிமைப்படுத்த வேண்டுமென அவர் ஆசிக்கிறார்.

அவர் எனக்களிக்கும் நம்பிக்கை, அன்பு மற்றும் நன்றியை மனிதர்கள் எனக்கு அளிக்க வேண்டுமென அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நான் அறியப்பட்டு அன்பு செய்யப்பட வேண்டுமென்பதற்காக மனிதரிடமிருந்து வணக்கத்தை எதிர்பார்க்கிறேன் என்பதல்ல. ஆனால் மனிதனை மீட்டு அவனுக்கு எனது மகிமையில் பங்களிப்பதற்காகவே நான் என்னைத் தாழ்த்திக் கொள்கிறேன் என்று கருத வேண்டும். மேலும் ஒன்றுமில்லாமையிலிருந்து உருவாக்கப்பட்டு, என் மக்களாகவே சுவீகாரம் செய்யப்பட்ட மனிதர்கள், அலகைகளோடு நித்திய துயரத்தில் பெருமளவில் விழுவதை, நான் என்னுடைய அன்பிலும், இரக்கத்திலும் உணருகிறேன். அதனால், தாம் படைக்கப்பட்டதின் நோக்கத்தை மனிதர்கள் நிறைவேற்றத் தவறி விடுகின்றனர். மேலும் தம் நேரத்தையும், நித்தியத்தையும் இழந்து போகின்றனர்.

நான் இப்போது விரும்புவதெல்லாம் ஒன்றே, நீதிமான்களின் அதிகமான பற்றும், பாவிகளின் நேர்மையான, நிலையான மனமாற்றத் திற்கான எளியவழியும், தந்தையின் இல்லத்தை நோக்கி ஊதாரி மைந்தன் திரும்பி வருவதும் தான். இங்கு சிறப்பாக யூதமக்களைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். மேலும் என் படைப்புகளும் மக்களுமான தவறான கொள்கை கொண்டவர்,



மதத்தை மறுதலித்தவர், அவிவிசுவாசிகள், தேவ துரோகிகள் மற்றும் அந்தரங்கமான சபையைச் சார்ந்தவர்களையும் இங்கு குறிப்பிடுகிறேன். படைத்தவரான கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை அகில உலகும் உணர வேண்டும் என ஆசிக்கிறேன். தமது அறியாமையை மீண்டும், மீண்டும் எடுத்துரைக்கும் இக்கடவுளை மனிதர்கள் உணருவதில்லை. இக்கடவுள் தம் தந்தை என்பதையும் அறிவதில்லை.

இதைப்படிக்கும் போது என் வார்த்தைகளுக்குச் செவிமடுப்பவராகிய நீங்கள் இதை உணர வேண்டும். கத்தோலிக்கத் திருச்சபைக்குப் புறம்பே இருக்கும் எல்லா மனிதரும், தம்மைப் படைத்த கடவுளாகிய தந்தை தமக்கு நிலை பேறான வாழ்வை அளிக்க விரும்புகிறார் என கேட்டுத் தெரிந்து கொண்டால், இவர்களில் பலர் குறுகிய மனம் படைத்தவர்கூட உங்களால் போதிக்கப்பட்ட தந்தையிடம் திரும்பி வருவர்.

நீங்கள் நேரடியாக அவர்களிடம் உரையாட முடியாவிட்டால், வேறு பல வழிகளைத் தேடவேண்டும். உண்மையான சீடனுக்குரிய பண்புடனும் பற்றுடனும் அவற்றை செயல்படுத்துங்கள். உங்களுடைய முயற்சிகள் அனைத்திற்கும், வெற்றி கிடைக்கும் அவற்றிற்குத் தேவையான அருட் கொடைகளை நான் வாரி வழங்குவேன் . எனது தந்தைக்குரிய இரக்கத்தின் தூதுவர்களாக விளங்குங்கள். அப்போது உங்களுக்கு நான் அருள் ஆன்மத் தாகத்தால், மக்களின் ஆன்மீகப் பணியில் நீங்கள் உறுதியுடன் செயல் படுவீர்கள்.

நான் எப்போதும், உங்கள் அண்மையிலிருக்கிறேன், உங்களுக்குள்ளும் இருக்கிறேன். உங்களில் இருவர் உரையாடிக் கொண்டிருந்தால் நான் உங்களோடு இருக்கிறேன். இருவருக்குமேல் இருந்தால் நான் உங்கள் நடுவிலிருக்கிறேன். அதனால் நான் சொல்லத் தூண்டுபவற்றை நீங்கள் சொல்வீர்கள் உங்களுக்கு செவிமடுப்பவர்களுக்குத் தகுந்த மன நிலையைத் தந்து அவர்களை உங்களுக்குச் செவிமடுக்கச் செய்வேன். அதனால் அன்பால் மனிதர்கள் ஆட் கொள்ளப்பட்டு நிலைப்பேறான வாழ்வு பெறுவர்.

நான் விரும்புவது போல என்னை மகிமைப்படுத்துவதற்கு உங்களிடம் கேட்பதெல்லாம் ஒன்றே ஒன்று. அதுதான் நம்பிக்கை. உங்களிடம் நான் கடுந் தவத்தையும், ஒறுத்தல்களையும் எதிர்பார்க்கவில்லை. காலணி அணியாமல் நடங்கள் எனக் கேட்கவில்லை. புழுதியில் விழுங்கள் எனச் சொல்லவில்லை. சாம்பலை உடல் எங்கும் வாரியிறை யுங்கள் என கேட்கவில்லை. நீங்கள் என்னுடைய அன்பு மக்களாக நடந்து என்மீது பற்றும் நம்பிக்கையும் கொள்ள வேண்டுமென விரும்புகிறேன்.

உங்களுக்கு மிகவும் கனிவுள்ள தந்தையர்களிடமிருந்து, எல்லாருக்கும் எல்லாமாக நான் இருக்கிறேன். உங்களோடு மிக நெருங்கிய உறவு கொள்கிறேன். என்னை எளியவனாக்கி, உங்களுக்கு என்னைத் தருகிறேன். அதனால் நீங்கள் நிலை பேறான வாழ்வில் உயர்ந்தவர்களாவீர்கள். அவிவிசுவாசிகள் பலரும், தீயவர்களும், பல சமயங்களைச் சார்ந்தவரும் தங்களுடைய தீமையிலும், விசுவாசம் இன்மையிலும், உழலுகின்றனர். ஏனெனில் நான் அவர்களுக்கு தங்களால் முடியாதவற்றைச் செய்யச் சொல்வதாகவும், என் கட்டளைகளுக்கு அடிமைகளாய்ப் போன்று பணியக் கட்டாயப்படுத்துவதாகவும் நினைக்கிறார்கள். மேலும் என்னை ஒரு கொடுங்கோலனாக மதித்து, நான் அவர்களை அதிகாரத்தோடும்,

ஆணவத்தோடும் தூர விலக்கி வைத்து அவர்களை எனக்கு மதிப்பும், மரியாதையும் செலுத்தக் கட்டாயப் படுத்துவதாகவும் கருதுகின்றனர். இல்லை என் மக்களே! இல்லை. எனக்கு என்னையே எளிமையாக்கத் தெரியும். நீங்கள் எண்ணிப் பார்ப்பதைவிட மிகச் சிறியவனாக என்னை மாற்றிக் கொள்ள முடியும்.

எனினும் உங்களிடம் எதிர்பார்ப்பதெல்லாம் நீங்கள் நான் திருச் சபைக்குத் தந்துள்ள கட்டளைகளைக் கடைபிடிப்பது ஒன்றே . அதனால் நீங்கள் பகுத்தறிவு படைத்தவராவீர்கள். ஒழுக்கமின்மையாலும், தீய இயல்பினாலும் வரப்பெற்ற விலங்குப்பண்பைப் பெற மாட்டீர்கள். மாறாகத் தெய்வீக அழகால் சிறந்து விளங்கும் ஆன்மா என்ற செல்வத்தை அழியாது பாதுகாப்பீர்கள்.

நான் முன்பு உங்களுக்குப் பணித்தவாறே நீங்கள் செயல்பட வேண்டும். என்னை ஒரு தனிச்சிறப்பு பக்தியால் மகிமைப்படுத்துங்கள். இது எனது ஆற்றலிலும், மகிமையிலும் உங்களுக்குப் பெரும் பங்களிக்கவும், உங்களுக்கு அருட்கொடைகளை வாரி வழங்கவும் நான் கொள்ளும் விருப்பத்தை உங்களுக்கு அறிவுறுத்தும். அதனால் நீங்கள் மகிழ்ச்சி யடைந்து மீட்பும் பெறுவீர்கள். நான் உங்களை அன்பு செய்ய விரும்புகிறேன் என்பதை உணர்ந்து அதற்குப் பதிலாக என்மீது நீங்கள் அன்பு செலுத்துவீர்கள்.

உண்மையான மக்களைப் போன்று நீங்கள் என்னை அன்பு செய்தால், எனது திருச்சபையையும், என் பதிலாளர்களையும் அன்புசெய்து பணிவான மரியாதையை அவர்களுக்கு அளிப்பீர்கள். என்மீது கொண்ட அச்சத்தினால் என்னை விட்டு விலகி, இப்போது நீங்கள் எனக்களிக்கும் மரியாதையைப் போல், அம்மரியாதை அமையக்கூடாது. நீங்கள் எனக்குக் காட்டும் இந்த பொய்யான மரியாதை நீதிக்குப் புறம்பானது. இதனால் எனது மிக மென்மையான இதயத்தை புண்படுத்துகிறீர்கள். தந்தைக்குரிய எனது அன்பை நீங்கள் மறந்து அதை எள்ளிநகையாடுகிறீர்கள். எனக்காக நீங்கள் கொண்டிருக்கும், தவறாகக் கருதப்படும் இந்த மரியாதை, என் மக்களான இஸ்ராயேலரைப் பற்றியும், இக்கால மக்களைப் பற்றியும் என்னை மிகவும் வருத்தத்தில் ஆழ்த்துகிறது. மனிதரின் பகைவனான சாத்தான் இம் மரியாதையைப் பயன்படுத்தி அவர்களை சிலை வழிபாட்டிற்கும், தவறான கொள்கைகளுக்கும் இட்டுச் செல்கிறது. இன்னும் தொடர்ந்து இதைச் செய்து கொண்டேயிருக்கிறது. அதனால், உண்மையின் பாதையிலிருந்தும், எனது திருச்சபையிலிருந்தும், என்னிலிருந்தும் உங்களை பிரித்து வைக்கிறது. இனியும் அவன் உங்களைத் தவறான வழியில் நடத்த அனுமதிக்காதீர்கள். உங்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட உண்மையை நம்புங்கள். அவ்வுண்மையின் பாதையில் வழி நடங்கள்.

கத்தோலிக்கத் திருச்சபைக்குப் புறம்பேயிருக்கும் என் மக்களே! நீங்கள் தந்தைக்குரிய எனது அன்பிலிருந்து ஒதுக்கப்படவில்லை என்பதை உணர்ந்துகொள்ளுங்கள். இந்த எனது கனிவான வேண்டுதலை உங்களுக்கு விடுவிக்கிறேன். ஏனெனில் நீங்களும் என் மக்கள் தாம்! இதுவரை அலகையின் வலையில் நீங்கள் சிக்கியிருந்தால், அவன் உங்களை ஏமாற்றியிருக்கிறான் எனத் தெரிந்துகொள்ளுங்கள். உங்களுடைய தந்தையாகிய என்னிடம் வாருங்கள்! உங்களை அன்புடனும், மகிழ்வுடனும் நான் ஏற்றுக்கொள்வேன்.



நீங்கள் கடைப்பிடிக்கும் மதத்தை மட்டும் அறிந்து அது உண்மை யற்றது என உணரும் நீங்கள், உங்கள் கண்களைத் திறந்து பார்க்க வேண்டும். உங்களைப் படைத்து, உங்களுக்கு மீட்பளிக்க விரும்பும், உங்களுடைய தந்தை இதோ இருக்கிறார். உங்களுக்கு உண்மையையும் , மீட்பையும் வழங்குவதற்காக நான் வருகிறேன். நீங்கள் என்னை அறியவில்லை என்பதை நான் அறிவேன். மேலும் நீங்கள் என்னைத் தந்தையாக, படைப்பாளராக, மீட்பராக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது ஒன்றையே நான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன். இதையும் நீங்கள் உணரவில்லை என்று நான் அறிவேன். இந்த அறியாமையால் தான் நீங்கள் என்னை அன்பு செய்வதில்லை. எனவே நீங்கள் நினைப்பதுபோல நான் உங்களிடமிருந்து விலகியிருக்கிறேன் என்று கருத வேண்டாம்.

உங்களைப் படைத்து, சுவீகார மக்களாக ஏற்றுக்கொண்டபின் எப்படி உங்களை நான் தனியாக விட முடியும்? நீங்கள் செல்லுமிடமெல்லாம், நான் உங்களுக்காகத் துணையாகயிருந்து உங்களைப் பாதுகாத்து வருகிறேன்.

அதனால் நீங்கள் எனது எல்லையற்ற இரக்கத்தை மறந்தபோதிலும், நான் உங்களுக்கு அளித்திருக்கும் தாராளத்தை இவை எல்லாம் உறுதிப்படுத்து கின்றன. எனது எல்லையற்ற இரக்கத்தை நீங்கள் மறந்ததால் இயற்கை தான் எங்களுக்கு எல்லாம் தந்து எங்களை வாழ வைக்கிறது. சாகவும் வைக்கிறது எனக்கூறுகிறீர்கள். ஆனால், இது அருளின் காலம், ஒளியின் நேரம். எனவே, நானே உண்மையான ஒரே கடவுள் என்பதை உணருங்கள்.

இம்மையிலும், மறுமையிலும் உண்மையான மகிழ்வை உங்களுக்குத் தருவதற்காக, இவ்வொளியில் நான் உங்களுக்கு அறிவுறுத்துவதை நீங்கள் செய்ய வேண்டும். இக்காலம் அதற்குப் பொருத்தமான காலம். காணக்கூடிய வகையில் உங்கள் இதயங்களில் பொழியப்படும், இந்த அன்பை நீங்கள் இழந்து விடக்கூடாது. திரு வழிபாட்டு முறைக்கேற்பத் திருப்பலியில் பங்கு பெற வேண்டுமென அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். இது எனக்கு எவ்வளவோ மகிழ்ச்சியைத் தருகிறது! இதற்குப்பிறகு சில சிறிய செபங்களைப் பற்றி உங்களுக்கு கூற விரும்புகிறேன். ஆனால் உங்கள் மீது பாரச்சுமையைச் சுமத்த நான் விரும்பவில்லை. நான் கூறியிருப்பது போல நீங்கள் என்னை மகிமைப் படுத்துவது ஒன்றே அதிமுக்கியமாகும். அதாவது, எனது மகிமைக்காக ஒரு திருவிழாவை ஏற்படுத்தி, உங்கள் தந்தையும், படைப்பாளரும், மற்றும் உலக மீட்பருமான என்னுடைய உண்மையான மக்களுக்குரிய எளிமையுடன் எனக்கு நீங்கள் ஊழியம் புரிய வேண்டும்.

மனிதர்பால் நான் கொண்டிருக்கும் தந்தைக்குரிய எனது அன்புக்கு இதோ மற்றொரு சான்று! என் மக்களே! எனது எல்லையற்ற அன்பின் முழு உயர்வைப் பற்றி நான் பேசப் போவதில்லை. ஏனெனில் திருநூற்கள் சிலுவை, நற்கருணைப் பேழை, மற்றும் நற்கருணையை உற்று நோக்கினாலே நான் உங்களை எந்த அளவுக்கு அன்பு செய்கிறேன் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.

மனிதரிடையே எனது அன்பைப் பரப்பும் பணிக்கு அடிகோலும் இவ்வுரையாடலை முடிக்கு முன் உங்களுக்கான எனது திருவுளத்தை நீங்கள் நிறைவேற்றவும், நான் அறிவிக்கப்பட்டு மேலும், அன்பு செய்யப்படுவதற்காகவும், உங்களுக்கான எனது அன்பின் எண்ணற்ற சான்றுகளில் சிலவற்றை உங்களுக்குத் தர விரும்புகிறேன்.

மனிதன் உண்மையில் வாழாதவரை அவன் உரிமையை அனுபவிக்க முடியாது. என் மக்களே! சட்டத்திற்குப் புறம்பே இருப்பவர்களே, அவற்றிற்கு பணிவதற்காகப் படைக்கப்பட்டவர்களே, உங்களிடம் அமைதியும், மகிழ்வும் நிலவுகின்றன என நீங்கள் எண்ணுகிறீர்கள். ஆனால் உள்ளத்தின் ஆழத்தில் மகிழ்வும் அமைதியும் இல்லை என நீங்கள் உணருகிறீர்கள். உங்களைப் படைத்த கடவுளும் தந்தையுமானவரின் உண்மையான உரிமையை நீங்கள் அனுபவிப்பதில்லை என்றும் உணரு கிறீர்கள்.

உண்மையான கட்டளைகளை கடைப்பிடிப்பவராகிய நீங்களும், அதைவிட உங்களது மீட்புக்காக நான் கொடுத்திருக்கும் சட்டங்களை அனுசரிப்பவராகிய நீங்களும் பாவத்தில் விழுந்து கிடக்கிறீர்கள். நீங்கள் மகிழ்வோடு இருக்கிறீர்களா? இல்லை. உங்களுடைய உள்ளங்கள் அமைதியில் இருப்பதில்லை என நீங்கள் உணருகிறீர்கள். இன்பத்தையும், மற்ற மனித சுகங்களையும் தேடுவதால் உங்கள் உள்ளங்கள் இறுதியில் நிறைவுபெற்று விடுமா? இல்லை. என்னை உங்கள் தந்தை என நீங்கள் ஏற்றுக் கொள்ளாத வரை உங்களுக்கு உண்மையான உரிமையும், மகிழ்வும் கிடைக்காது. நீங்கள் என்னுடைய உண்மையான மக்களாவதற்கு எனது நுகத்தை ஏற்றுக் கொள்ளும் வரை உங்களுக்கு அவைகள் கிடைக்காது.

ஏன்? ஏனெனில் என்னை அறிந்து,அன்பு செய்து,ஒரு குழந்தை தன் தந்தையின் பால் நம்பிக்கை கொண்டு அவருக்குப் பணிவது போல நீங்களும் எனக்குப் பணிபுரிய வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காகவே நான் உங்களைப் படைத்தேன்.

ஒருமுறை பழைய ஏற்பாட்டில் மனிதர்கள் விலங்குகளைப் போல் நடந்து கொண்டனர். தாம் , தம் தந்தையராகிய கடவுளின் மக்கள் என்ற பெருமைக்குரிய எந்த அடையாளத்தையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, அவர்களை அப்பெருமையை உணரச் செய்வதற்காக சிலவேளைகளில் நான் மிகக் கண்டிப்புடன் நடக்க வேண்டியிருந்தது. ஆனால் அவர்களில் சிலர் இதைப்புரிந்து கொண்டபோது, அவர்கள் விலங்குகளிடமிருந்து ஒதுங்கி வாழ்ந்தனர். அப்போது அவர்கள் மீது நான் அளவற்ற கொடைகளை பொழிந்தேன். தமது பெருமையை உணர்ந்து அதை மதிக்கத்தவறியவர்மீது வெற்றிகொள்ளும் ஆற்றலையும் அவர்களுக்கு ஈந்தேன். அவர்கள், பலுகிப் பெருகியபோது என் மகனை அவர்களிடத்தில் அனுப்பினேன். முழுமை நிறைந்த கடவுளின் மகனாக அவர் இருந்ததால் மக்கள் அவரை அவருடைய முழு நிறைவிலே வணங்கினர். அவர்தான் நிறை வாழ்வுக்கான வழியை அவர்களுக்குக் காட்டினார். அவர் மூலமாக உங்களை நான் எனது எல்லையற்ற அன்பில் உண்மை மக்களாக சுவிகாரம் செய்தேன். அன்றிலிருந்து உங்களை படைப்புகள் என்றல்ல, மக்கள் என்றே அழைத்து வந்திருக்கிறேன்.

அதன்பின் புதிய சட்டத்தின் இயல்பால் உங்களை நிறைவு செய்தேன். அது உங்களைப் பழைய சட்டத்தின் மனிதராகிய விலங்குகளிடமிருந்து பிரித்ததோடு அல்லாமல், பழைய ஏற்பாட்டு மனிதர்களை விட உங்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது. மேலும் உங்கள் அனைவரையும் கடவுளின் மக்களாகும் பெருமைக்கு உயர்த்தினேன். ஆம்! நீங்கள் என் மக்கள் நான் உங்களுக்கு தந்தை என நீங்கள் என்னிடம் கூற வேண்டும். குழந்தைகள் செய்வது போல நீங்கள் என்னிடம் நம்பிக்கை



வையுங்கள். ஏனெனில் இந்நம்பிக்கையின்றி நீங்கள் உண்மையான உரிமை கொண்டிருக்க முடியாது.

இந்த அன்பின் பணியை நிறைவேற்ற நான் வருகிறேன். மேலும் உங்களுடைய ஆன்மாக்களை சிறை வைத்திருக்கும் கொடிய அடிமைத் தனத்தை விடுவிக்க உங்களுக்கு ஆற்றல் அளிக்கவும், உண்மை மகிழ்வைத் தரும் உண்மையான உரிமையை நீங்கள் அனுபவிக்கவும் நான் வருகிறேன். இதை நீங்கள் உணரவேண்டுமென்பதற்காகவே நான் மேற்கூறியவற்றை எல்லாம் உங்களுக்கு எடுத்துரைத்திருக்கிறேன். இந்த உரிமையோடு, உலக சுகங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், உலக சுகங்கள் ஒன்றுமில்லாதவையே! கடவுளின் மக்கள் என்ற பெருமைக்கு நீங்கள் உங்களை உயர்த்திக்கொண்டு அப்பெருமையை மதித்து பேணக் கற்றுக் கொள்ளுங்கள். அப்போது முன்பு என்றும் இல்லாதவாறு நான் உங்களுக்குத் தந்தையாகயிருப்பேன்; எல்லாத் தந்தையரையும்விட அன்பும் இரக்கமும் உள்ள தந்தையாகயிருப்பேன்.

இந்த அன்பின் பணியோடு அமைதியையும் அளிக்க நான் வந்திருக் கிறேன். யாரெல்லாம் என்னை மகிமைப்படுத்தி என்மீது நம்பிக்கை கொண்டிருக் கிறார்களோ, அவர் மீதெல்லாம் அமைதியின் ஒளியை வீசச் செய்வேன். அதனால் அவர்கள் என்னைத் தந்தை என்று அழைத்து என்னை அன்பு செய்யும் போது அவர்களுடைய தொல்லைகள், கவலைகள் மற்றும் துன்பதுயரங்களிலிருந்து அவர்களை விடுவிப்பேன். அவர்களுக்கு என்னுடைய அமைதியையும், அத்தோடு எனது பராமரிப்பையும் வழங்குவேன். தொழிலாளர்களும், வணிகர்களும், கைவினைஞர்களும் என்னை அழைத்து மகிமைப்படுத்தினால், அவர்களுக்கு என்னுடைய அமைதியையும், ஆற்றலையும் தருவேன். நான் ஒரு நல்ல இரக்கமுள்ள தந்தை என அவர்களுக்குக் காட்டுவேன். அனைத்துக் கிறிஸ்தவக் குடும்பங்களும் என்னைக்கூவி அழைத்து மகிமைப்படுத்தினால், அவர்களுக்கு எனது அமைதியைத் தருவேன். நான் அளவற்ற அன்பு கொண்ட ஒரு தந்தை என அவர்களுக்கு உணர்த்துவேன். எனது ஆற்றலால் அவர்களுக்கு நித்திய மீட்பைத் தருவேன்.

மனித இனம் முழுவதும் என்னை அழைத்து மகிமைப்படுத்தும் போது அதன்மீது அமைதியின் ஆவியை பனிபோலப் பொழிவேன்.

எல்லா நாடுகளும் என்னை அழைத்து மகிமைப்படுத்தினால், நாடுகளி டையே வேற்றுமையும், போரும் இருக்காது. ஏனெனில் நான் அமைதியின் கடவுள் நான் எங்கு இருக்கிறேனோ அங்கு போருக்கு இடமேயில்லை.

உங்களுடைய பகைவன்மீது நீங்கள் வெற்றி கொள்ள விரும்பு கிறீர்களா? என்னை கூவியழையுங்கள்! அப்போது எளிதில் அவனை நீங்கள் வென்று விடுவீர்கள்!

இறுதியாக நீங்கள் ஒன்றை உணர்ந்துகொள்ள வேண்டும். எனது ஆற்றலால், நான் எதையும் செய்யமுடியும். இப்போது அந்த ஆற்றலை உங்களுக்குத் தருகிறேன். அதை இன்னும் என்றும் பயன்படுத்துங்கள். நீங்கள் உங்களை என் மக்கள் எனக் காட்டினால், நான் எப்போதும் என்னை உங்களுடைய தந்தை எனக் காட்டுவேன்.

மனித உள்ளங்கள் என்னை உணர்ந்துகொள்ளாவிட்டால், இந்த அன்பின் பணியினால் நான் என்ன சாதிக்க முடியும்.

முழுமையான தூய்மை உள்ளவன் நான்! அதை முழுமையாக வெளிப்படுத்துபவனும் நானே! அதற்குக்காரணமும் நானே! என்னுடைய தூய ஆவியின் மூலம் அத்தூய்மையை உங்களுக்கு அளித்து, என் மகனுடைய பேறுபலன்களால் அதை உங்கள் உள்ளங்களில் நிறையச் செய்வேன். என் மகன் வழியாகவும், தூய ஆவியின் வழியாகவும் நான் உங்களிடம் வருகிறேன். உங்களுக்குள்ளும் வருகிறேன். உங்களிடம் தான், என் உறைவிடத்தைத் தேடுகிறேன்.

நான் உங்களுக்குள் வருகிறேன் என்ற சொற்கள் சிலருக்கு ஒரு மறை பொருளாகத் தோன்றலாம். ஆனால் அது ஒரு மறைபொருளல்ல! ஏனெனில், நற்கருணையை ஏற்படுத்த என் மகனுக்குப் பணித்தபிறகு எப்போதெல்லாம் நீங்கள் நற்கருணை உட்கொள்கிறீர்களோ அப்போதெல்லாம் நான் உங்களுக்குள் வருகிறேன். என்னால் ஆகாதது ஒன்றுமில்லை. எனவே நற்கருணை நிறுவப்படுவதற்கு முன்பே நான் உங்களிடம் வருவதை எதுவும் தடை செய்திருக்க முடியாது. ஆனால் நற்கருணை உட்கொள்வது, நான் உங்களிடம் எவ்வாறு வருகிறேன் என்பதைப் புலப்படுத்தும் ஒரு செயலாகும். அதன் மூலம் நான் உங்களிடம் வருவதை நீங்கள் எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது.

நான் உங்களுக்குள் இருக்கின்றபோது, நீங்கள் விரும்பிக்கேட்டால், என்னிடமுள்ள அனைத்தையும் உங்களுக்கு தருவேன். இந்த அருட் சாதனத்தின் மூலம் நீங்கள் என்னோடு நெருங்கிய உறவில் பிணைக்கப் பட்டிருக்கிறீர்கள். அந்தப்பிணைப்பில், உங்கள்மீது பொழியப்படும் எனது அன்பு, உங்கள் ஆன்மாக்களில் எனது தூய்மையைப் பரப்புகிறது. எனது அன்பால் உங்களை நிரப்புகிறேன். இனி நீங்கள் என்னிடம் மன்றாட வேண்டும். அப்போது உங்களுக்குத் தேவையான புண்ணியங்களையும், நிறைவாழ்வையும் நீங்கள் பெறுவது உறுதி. கடவுள் தம் படைப்புகளிடத்தில் உறைவிடத்தைத்தேடும் இந்நாட்களில், உங்களுக்கு எதுவும் மறுக்கப்படாது.

எனக்குப் பிடித்தமான உறைவிடம் எதுவெனத் தெரிந்தபின், நீங்கள் அதை எனக்குத் தராமலிருப்பீர்களா? நான் உங்களுடைய தந்தையும் கடவுளுமாயிருப்பதால், நீங்கள் எனக்கு இதை மறுக்கமாட்டீர்கள் என எண்ணுகிறேன். உங்களிடம் தமக்கு இந்த ஒரே ஒரு உதவியை மட்டும் நாடும் உங்கள் தந்தையிடம் கடுமையாக நடந்து அவருக்கு வேதனை அளிக்கக்கூடாது. இவ்வுரையாடலை முடிப்பதற்கு முன், எனது பணிக்காகத் தம்மை அர்ப்பணித்திருக்கும் எண்ணற்ற ஆன்மாக்களுக்கு எனது விருப்பத்தைக்கூற ஆசிக்கிறேன். குருக்களும், துறவிகளும் தாம் அவ்வான்மாக்கள், ஆழ்ந்தியான வாழ்விலோ, பிறர் அன்புப் பணியிலோ, மறைபரப்புப்பணியிலோ ஈடுபட்டிருக்கும் நீங்கள், எனது பணிக்காக உங்களை அர்ப்பணித்திருக்கிறீர்கள். என்னைப் பொறுத்தவரையில், எனது இரக்கத்தினால் உங்களுக்குத்தரப்பட்ட கொடை இது. உங்களைப் பொறுத்த மட்டில், உங்களது நல்லெண்ணத்தால், உங்களது அழைத்தலின் நேர்மையை இது காட்டுகிறது.

மனித இனத்திடமிருந்து நான் எதிர்பார்ப்பதை எளிதில் உணர்ந்து கொள்ளும் உங்களிடம் நான் இதை எதிர்பார்க்கிறேன். என்னிடம் மன்றாடுங்கள். அதனால் எனது அன்பின் பணியை அனைத்து ஆன்மாக்களிலும், நிறை வேற்றுவேன். ஆன்மாக்களைக் காப்பாற்றுவதில் இருக்கும் தொல்லைகளை நீங்கள் அறிவீர்கள். இதோ எண்ணற்ற பலரை என்னிடம் கொண்டு வருவதற்கான ஒரு சிறந்த வழிமுறையைக்



காட்டுகிறேன். மனிதருக்கு என்னை அறிவித்து அதனால் நான் அன்பு செய்யப்படவும் மகிமைப்படுத்தப்படவும் செய்வதே அவ்வழி முறையாகும்.

இதை நீங்கள் தாம் முதலில் செய்து காட்ட வேண்டும். குருக்களின் மற்றும் துறவிகளின் இல்லங்களில் முதலில் நுழைவது எனக்கு எவ்வளவோ மகிழ்வைத் தருகிறது! எனது அன்பின் மக்களிடையே நான் என்னைத் தந்தையாகக் காணும்போது எவ்வளவோ ஆனந்தம் அடை கிறேன் தெரியுமா! உங்களோடு உற்ற நண்பர்களைப்போன்று உரையாடுவேன். உங்களுக்கு நான் மிகவும் நம்பிக்கைக்கு உரியவனாயிருப்பேன். உங்களுக்கு அனைத்துமாயிருப்பேன். உங்களது தேவைகளை நிறைவு செய்வேன். அனைத்திற்கும் மேலாக, உங்கள்மீது தம் அன்பையும், கொடைகளையும், விரிந்து பரந்த இரக்கத்தையும் பொழிந்து, உங்களுடைய மன்றாட்டுகளை கேட்கும் தந்தையாகயிருப்பேன்.

உங்களோடு அனுபவிக்க விரும்பும் இம்மகிழ்வை எனக்கு தர மறுக்க வேண்டாம். அதற்காக உங்களுக்கு நூறு மடங்கு பிரதிபலனளிப்பேன். நீங்கள் என்னை மகிமைப்படுத்துவதால், நானும் உங்களை மகிமைப்படுத்துவேன். மேலும் உங்களுக்கு எனது அரசில் பெரும் புகழைத் தருவேன். நானே ஒளிகளுக்கெல்லாம் ஒளியாவேன். இவ்வொளி எங்கெல்லாம் பரவுகிறதோ, அங்கெல்லாம் வாழ்வும், உணவும், மகிழ்வும் இருக்கும். பயணிகள், குறைகாண்போர் மற்றும் அறியாமையில் உழலுவோர் மீதும் இவ்வொளி பரவும். இவ்வுலகின் இருளிலும், தீமையிலும், சிக்கித் தவிக்கும் மனிதர்களே! உங்கள் அனைவர் மீதும் இவ்வொளியைத் தரவில்லை என்றால் நீங்கள் சாவின் படுகுழியில் வீழ்ந்து அழிவீர்கள்.

இறுதியாக, இவ்வொளி கத்தோலிக்கத் திருச்சபைக்கு வழி காட்டும் பாதையை ஒளிர்விக்கிறது. மேலும் மூடநம்பிக்கையில் உழலுபவருக்கு வழி காட்டுகிறது.

கைவிடப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர், துன்புறுத்தப்படுவோர், நோயால் வேதனைப்படுவோர், மற்றும் எல்லாத் தொழுநோயாளிகளுக்கும் நான் என்னைத் தந்தை எனக் காட்டுவேன். குடும்பங்கள், அநாதைகள், விதவைகள், சிறைப் பட்டோர், தொழிலாளர் மற்றும் இளைஞருக்கும் நான் தந்தையாயிருக்கிறேன். அரசர்கள், மற்றும் அனைத்து நாடுகளுக்கும் நான் தந்தையாயிருக்கிறேன். நீங்கள் அனைவரும் என்னுடைய இரக்கத்தையும், அரவணைப்பையும் ஆற்றலையும் உணர்ந்து அவற்றில் வாழ்வீர்கள்.

தந்தைக்குரிய எனது தெய்வீக ஆசீர் உங்கள் அனைவர் மீதும் இருப்பதாக. ஆமென்!

என் மகனும் பதிலாளருமான திருத்தந்தைமீது இருப்பதாக, ஆமென்!

என் மகனாகிய ஆயர்மீது இருப்பதாக என் மகனாகிய உன் ஆன்மக் குருவின் மீது இருப்பதாக ஆமென்!

என் பிள்ளைகளாகிய உன் தலைவிகள் மீது இருப்பதாக ஆமென்!

எனது அன்பின் எல்லாச் சபைகள் மீதும் இருப்பதாக ஆமென்!

அனைத்து திருச்சபையின்மீதும் திருப்பணியாளர்கள்மீதும் இருப்பதாக ஆமென்!

சிறப்பாக, உத்தரிக்கும் இடத்தில் வேதனைப்படுவோர்மீதும் இருப்பதாக ஆமென்!

ஆமென் ! ஆமென் !

This Version is a Reprint and Tamil Translation of the

**Hampton Marian Centre,**
**261, Hampton Street, Hampton,**
**Victoria Australia 3188**
**Phone : (03)9597 0333 Fax : (03) 9597 0333**

Distribution of Free Copies of our Divine Father By : **Rev.S.Thomas C.R.**
**Rev.Sr.L.Mary CIC &**
**Mr.L.Santha Raj** M.A.(S.W).,B.Ed., PGDHRD
**Messengers for Mary**
373/H1/H2-73, R.M.Nagar,
Dindigul - 624 001
Tamil Nadu, South India.

Computer Typesetting By : **Lead India Communication Centre**
17B/1&2, Pandian Nagar,
Dindigul - 624 001
Tamil Nadu, South India.

: **Lead India Business Centre**
16A,P1&P2, Jubilee Building
Beschi College,Karur Road
Dindigul - 624 001
Tamil Nadu, South India.

**Please be kind enough to contribute more with your generosity to the extent possible by you for bringing up the Devotion to our Father in Heaven.**

**Contribution can be sent to the following address**

**MESSENGERS FOR MARY**

373/H1/H2-73, R.M.Nagar, Dindigul - 624 001
Tamil Nadu, South India.
Telefax : 91 (0451) 2440297 , 2440298 2461807
leadmfm@dataone.in & leadmfm@gmail.com
raja_santha@yahoomail.co.in & litelicc@sify.com
Cell Phone : 94433 - 25807

**PERMISSION GRANTED FOR REPRODUCTION**
**" Be a Messenger of our Father and Mother Mary"**



## "அவர் வழியாக அவரோடு அவரில்"
# கடவுள் என் தந்தை

என் விண்ணகத் தந்தாய் ! நீர் என்னுடைய தந்தை என்பதையும், நான் உம்முடைய பிள்ளை என்பதையும் அறிவது எவ்வளவோ மகிழ்வைத் தருகிறது! எனது ஆன்மீக வானம் இருளால் நிறைந்திருக்கும்போது, எனது சிலுவையின் பாரம் என்னை அழுத்தும்போது, தந்தாய், நீர் என்பால் செலுத்தும் அன்பை முழுமையாக நம்புகிறேன் என்று அடிக்கடிச் சொல்வதின் தேவையை நான் உணருகிறேன்.

ஆம் தந்தாய் ! எனது வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்திலும் நீர் எனக்குத் தந்தையாய் இருக்கிறீர், நான் உமக்குப் பிள்ளையாகயிருக்கிறேன் என்பதை நான் நம்புகிறேன். நீர் என்னை எல்லையற்ற அன்பால் நேசிக்கிறீர் என்பதையும் நம்புகிறேன்.

இரவு பகலாய் என்னை நீர் காத்து வருகிறீர், உமது ஆணையின்றி என் தலையிலிருந்து ஒரு முடிகூட விழுவதில்லை என்பதையும் நம்புகிறேன். உமது எல்லையற்ற ஞானத்தால், எனக்கு நன்மையானவற்றை நான் அறிவதைவிட நீர் மேலாகவே அறிகிறீர் என்பதை விசுவசிக்கிறேன்.

உமது எல்லையற்ற ஆற்றலால், நீர் தீமையிலிருந்தும்கூட நன்மையைக் கொணர முடியும் என விசுவசிக்கிறேன். உமது எல்லையற்ற கருணையால், உம்மை அன்பு செய்பவருக்கு அனைத்தையும் நன்மையாகவே மாற்றுகிறீர் என்பதையும் விசுவசிக்கிறேன். என்னை அடுத்தவர்களின் கரங்கள் அடித்தபோதிலும், குணமளிக்கும் உமது கரத்தை நான் முத்தமிடுகிறேன். நான் உம்மை விசுவசிக்கிறேன், என் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் அன்பையும் அதிகப்படுத்தியருளும்.

எனது வாழ்வின் எல்லா நிகழ்வுகளையும் உமது அன்பு நெறிப்படுத்துகிறது என்பதை நான் கண்டுணரச் செய்யும். தனது தாயின் கரங்களில் தன்னை முழுவதும் அர்ப்பணிக்கும் ஒரு குழந்தையைப் போன்று என்னை முழுவதும் உமக்கு அர்ப்பணிக்க எனக்குக் கற்பித்தருளும்.

தந்தாய் ! நீர் அனைத்தையும் அறிகிறீர் ! அனைத்தையும் காண்கிறீர் ! நான் என்னை அறிவதைவிட நீர் என்னை மேலாகவே அறிகிறீர். நீர் அனைத்தையும் செய்யும் ஆற்றல் கொண்டுள்ளீர் ! என்னை அன்பு செய்கிறீர் ! தந்தையே ! நான் எப்போதும் உம்மையே நாடி வரவேண்டுமென நீர் விரும்புவதால், நம்பிக்கையுடன் உம்மை நாடி வந்து உம்மிடம் நான் மன்றாடிக் கேட்பது என்னவென்றால்... (தம் சொந்தத் தேவைகளை எடுத்துச் சொல்லவும்) இம்மன்றாட்டை உம் திருமகன் இயேசுவோடும், அன்னை மரியாளோடும் சேர்ந்து ஒப்புக்கொடுக்கிறேன்.

இக்கருத்திற்காக, இயேசுவின் திரு இருதயத்தோடும், மரியாளின் மாசற்ற இதயத்தோடும் இணைந்து என்னையும், என் செபங்களையும், தியாகச் செயல்களையும், ஒறுத்தல் முயற்சிகளையும், பணிகளையும், கடமையை ஆற்றும் நல்ல உள்ளத்தையும் உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன்.

எனக்கு உமது ஒளியையும், அருட்கொடைகளையும் தூய ஆவியையும் தந்தருளும்! உமது தூய ஆவியால் என்னை உறுதிப்படுத்தியருளும். அதனால் நான் அவரை ஒருபோதும் இழக்காதிருக்கவும், அவரை மன நோகச் செய்யாதிருக்கவும், அவரை என்னில் வலுவிழக்கச் செய்யாதிருக்கவும் வரம் தந்தருளும். இவற்றை எல்லாம் உம் திருமகன் இயேசுவின் பெயரால் நான் மன்றாடுகிறேன். ஆண்டவராகிய இயேசுவே! உம் இதயத்தைத் திறந்து அதில் என் இதயத்தை வைத்து மரியாளின் மாசற்ற இதயத்தோடு அதை இறைத்தந்தைக்கு அர்ப்பணித்தருளும். நான் கேட்கும் மன்றாட்டுக்களை எல்லாம் எனக்குப் பெற்றுத் தந்தருளும்.

இறைத்தந்தாய்! எல்லா மனிதரையும் உம்மிடம் அழைத்துக் கொள்ளும், உமது தந்தைக்குரிய இரக்கத்தையும், தெய்வீக கருணையையும், உலகமெல்லாம் அறிக்கையிடச் செய்தருளும்.

எனக்குக் கனிவுள்ள ஒரு தந்தையாகயிருந்தருளும். நான் செல்லுமிடமெல்லாம் என்னை கண்ணின் மணியை போன்று காத்தருளும். என்னை உமக்கேற்ற பிள்ளையாக மாற்றியருளும். என்மீது இரக்கம் வையும்! இறைத்தந்தாய் ! எங்கள் ஆன்மாக்களின் இனிமையான நம்பிக்கையே! மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி உம்மீது அன்பு கொள்ளச் செய்தருளும். இறைத்தந்தாய்! மக்களினத்தார்மீது பொழியும் எல்லையற்ற இரக்கமே! மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி உம்மீது அன்பு கொள்ளச் செய்தருளும்! இறைத் தந்தாய்! மனித இனத்தின் மீது பெய்யும் கருணை மழையே! மாந்தர் அனைவரும் உம்மை அறிந்து, மகிமைப்படுத்தி உம்மீது அன்பு கொள்ளச் செய்தருளும்.

**-அன்னை யூஜேனியா-**

---

† GIRARD, Vicar Apostolic
(9 October 1935)
† JEAN, Cardinal VERDIER
Archbishop of Paris (8 May 1936)

(1) If this prayer is tobe recited as a novena.
add: "I promise to be more generous, especially during these nine days,in a given circumstance, to such and such a person....."